# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் : 14 இதழ் : 9 ஓகத்து, 1962 விலை : சதம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் படம்



இலங்கையிலுள்ள கண்டி நடனம் உலகப் பிரசித்தி பெற்றது. கண்டியில் நடைபெறும் பெரஹரா விழாவில் கண்டி நடனம் முக்கிய இடம் பெறுகின்றது. கண்டி நடனமாடுபவர் றபான் விளையாட்டிலும் கைதேர்ந்தவராக இருப்பதும் உண்டு. கண்டி நடனம் ஆடுபவர் ஒருவர் வாயிலே ஒரு கிளைத்தடியை வைத்து அதன்கண் சுழன்று கொண்டிருக்கும் நான்கு றபான்களை ஏந்திக் கொண்டும் இடது கையில் அவ்வாறே ஒரு கிளைத் தடியில் சுழன்று கொண்டிருக்கும் நான்கு றபான்களை ஏந்திக் கொண்டும் வலது கையில் சுழன்றுகொண்டிருக்கும் ஒரு றபானை ஏந்திக்கொண்டு நிற்கிருர். இவ்வாறு சுழன்று கொண்டிருக்கும் றபான்களை ஏந்திக் கொண்டும் நிற்பதற்குச் சிறந்த பயிற்சி அவசியமாகும். இத்தகைய றபான் விளையாட்டில் கண்டி நடனமாடுவோர் கைதேர்ந்தவர்கள் என்பதை அட்டைப்படம் சித்தரித்துக் காட்டுகிறது. இலங்கையில் ஆகஸ்ட் மாதந்தோறும் நடைபெறும் பிரதான விழா கண்டி பெரஹரா என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தேசீய உற்பத்தி இயக்கம் .. .. .. | 3 |
| 2. | பாற்சபையின் தோற்றம் .. .. .. | 5 |
| 3. | அரசினர் கூட்டுத் தாபனங்கள் .. .. .. | 6 |
| 4. | புதுமனை குடிபுகுதல் .. .. .. | 8 |
| 5. | வரலாற்றில் மலாயா .. .. .. | 11 |
| 6. | சிவதொண்டன் யோகாஞ்சலி .. .. .. | 13 |
| 7. | மலாயாவில் பாவைக் கூத்து .. .. .. | 14 |
| 8 | கலைநகர் .. .. .. .. | 15 |
| 9 | கூட்டுறவுப் பண்ணைகள் .. .. .. | 18 |
| 10. | அங்கணம்மைக் கடவை .. .. .. | 20 |
| 11. | அருச்சனை மலர் .. .. .. .. | 23 |
| 12. | குற்றம் குற்றமே .. .. .. .. | 25 |


ஆர். 4734—5,608 (9/62)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 190



# தேசீய உற்பத்தி இயக்கம்

**குறுகிய காலத்திட்டம்**

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் உணவு உற்பத்திகள் குறுகிய காலத்தில் பெருக வேண்டியதன் அவசியத்தைக் காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா தமது அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துள்ளார். வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையும், விலைவாசி அதிகரிப்புப் பிரச்சினையும் முன்னரிலும் பார்க்க மேலுமதிகமாக இருப்பதால், யுத்த காலத்தின்போது கடைப்பிடிக்கப்பட்டதுபோல் தேசீய உணவு உற்பத்தி இயக்கம் இப்போதும் தீவிரமாக நடத்தப்படவேண்டும் எனவும் அமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட உணவு உற்பத்தி இயக்கம் பயனளிக்கத் தொடங்கியுள்ளது. எனினும், குறுகிய காலத்தில் பலன் தரக் கூடிய பயிர்ச் செய்கைகளே இப்போதைய தேவையாகும்.

உணவு உற்பத்தி இயக்கத்தில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ளும் வகையில் கிராம ஸ்திதியிலும் தகுந்த செயலமைப்பு ஏற்பட வேண்டும். உணவு உற்பத்தி இயக்கத்துக்கு மாவட்ட விவசாய சங்கங்கள் திட்டம்வகுக்க வேண்டும்.

குறுகிய கால உணவு உற்பத்தி இயக்கத்தைத் தொடக்குதல் சம்பந்தமாக விவசாய அபிவிருத்தி இணைப்பு நிரந்தரக் குழுவின் விசேஷ கூட்டத்தில் ஆராயப்பட்டது. அதில் பின்வரும் உத்தரவுகளைக் காணி, விவசாய அமைச்சர் விடுத்துள்ளார் :

**ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிலத்தைப் பூரணமாகப் பயன் படுத்துதல்.**

### (அ) நெல் விளைவிக்கப்படும் நிலம்

ஏகவர்க்க விதை நெல், உரம் ஆகியனவற்றைப் பயன் படுத்துவதால், துரிதவெற்றி காணலாம் என்பதை அனுபவவாயிலாக அறிந்துள்ளோம். நிரையில் நடுதல், களையகற்றல், களை நாசினிகளைப் பாவித்தல் முதலியனவற்றினால் மேலும் அதிக பயன் கிட்டும். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வேண்டிய ஏகவர்க்க விதை நெல், உரம் முதலானவற்றைக் கூர்ந்து கவனித்து, அவற்றைப் பயன் படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கேட்கப்படுகிறது.

### (ஆ) நெற் பயிர் செய்யப்படாத நிலம்

பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இரு காலங்களின்போதும் 4,63,945 ஏக்கர் நிலத்தில் நெல் விளைவிக்கப்படுவதில்லை என்பதை அறிவீர்கள். அபிவிருத்தி செய்யப்பட்ட நிலம் இப்படி வீணாவதைக் கூடிய விரைவில் தடுக்கவேண்டும். விரைவில் மாவட்ட விவசாயக் குழுக்களைக் கூட்டி, அத்தகைய நிலங்களைப் பயிரிடாது இருப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து, கஷ்டங்களைக் போக்க முயலுதல் வேண்டும்.

### (இ) நீர்ப்பாசனக் கஷ்டங்கள்

பெரிய, சிறிய விவசாயத் திட்டங்களில் நீர்ப்பாசனக் கஷ்டங்கள் எதுவும் இருந்தால், நீர்ப்பாசன இலாக்கா அதிகாரிகளின் உதவியுடன் அவை கவனிக்கப்பட வேண்டும். விசேஷ கஷ்டம் எதுவும் இருந்தால் விவசாய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு எழுதுங்கள்.

### குடியேற்றத் திட்டங்கள்

குடியேற்றத் திட்டங்களில் உள்ள விவசாயிகள் பலர் ஏகவர்க்க விதை நெல்லையும் உரத்தையும் உபயோகிப்பதில்லை என அறிகிறேன்.

அவற்றை உபயோகிப்பதனால் நல்ல விளைவும், துரித பலனும் கிடைக்குமாதலால், எதிர்வரும் பெரும்போக விவசாயத்திற்கு ஏகவர்க்க விதைநெல் எச். 4 கூடியவரையில் அதிகமாகப் பாவிக்கப்பட வேண்டும். தேவைப்படும் உரத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



### உள்ளூர்க் குழு

மேற்குறித்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு குடியேற்றத் திட்டத்திலும், உதவி அரசாங்க அதிபர் அல்லது மாவட்ட காணி அதிகாரியைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று நிறுவப்பட வேண்டும். அவற்றில் விவசாய போதனையாளர்கள், விவசாய அதிகாரிகள், கமத்தொழில், சேவையின் மாவட்ட அதிகாரிகள் ஆகியோர் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். இக்குழு மாவட்ட விவசாயக் குழுவின் மேற்பார்வையின் கீழ் செயற்படும்.

### வீட்டுத் தோட்டப் போட்டிகள்

இளம் விவசாயிகளிடையே நடத்தப்பட்டு வரும் வீட்டுத் தோட்டப் போட்டிகள் சாரண யுவர், யுவதிகளையும் சேர்த்துக் கொள்ளும் வகையில், போட்டிகள் விவசாய இலாகாவினுல் விஸ்தரிக்கப்படும். விவசாய அதிபர் தம்மிடம் உள்ள நிதியிலிருந்து இப் போட்டிப் பரிசுகளை வழங்குவார்.

### மரம் நடும் இயக்கம்

மரம் நடும் இயக்கத்தின் கீழ் அதிக மா, பலா, தோடை, எலுமிச்சை, முந்திரி மரம் ஆகியன நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### உணவுப் பயிர்ச் செய்கைக்கும், நிரந்தரப் பயிர்ச் செய்கைக்கும் இன்னும் அதிக நிலத்தைப் பராதீனப் படுத்துதல்.

பின்வரும் விஷயங்கள் சம்பந்தமாகவும் சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன :—

(1) குளப்படுக்கை விவசாயம்.

(2) முக்கிய பயிர்களுக்காக நிலம் பராதீனப்படுத்துதலும், தனிப்பட்டவர்களைக் கொண்டு கிராமங்களின் உடைந்த குளக் கட்டுகளைச் செம்மைப்படுத்துதலும்.

(3) சேனைச் செய்கை நிலத்தில் நெல் விளைவிப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

(4) கிராமக் குளங்களைத் திருத்துதலும் அவற்றுக்கு அருகாமையில் உள்ள நிலங்களை உள்ளூர் மக்களுக்குப் பராதீனப் படுத்துதலும்.

(5) சட்ட விரோதமாகக் காணிகளில் உள்ளிட்டமையைச் சரிப்படுத்துதலும், மிக்க மோசமான வழக்குகளைத் தவிர, சட்ட விரோதமாகக் காணிகளில் உட்புகுந்தவர்கள்மீது தொடரப்பட்ட வழக்குகளை நிறுத்தி வைத்தலும்.

(6) வன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கிடைக்கக் கூடிய நிலத்தை நெல், குரக்கன் முதலியவற்றைச் சேனைச் செய்கையில் பயிரிடுவதற்கு வழங்குமாறு வன பாதுகாப்பாளருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

### கோழிப் பண்ணையும் மற்றும் மிருக வளர்ப்பும்

முட்டை உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கான வரி அதிகரிக்கப்பட்டிருப்பதால், முட்டை உற்பத்தி அதிகரிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

### சந்தைப்படுத்தல்

மத்திய சந்தையில் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இச்சங்கம் மரக்கறி, வாழைப்பழம், கிழங்கு வகைகள் முதலான வற்றைத் தொகையாக வாங்கி மற்றவர்களுக்குச் சில்லறையாக விற்பனை செய்தல். இச்சங்கம் பயன்படத்தக்க வகையில் செயற்பட்டு வருகிறது. சந்தைப்படுத்தல் சம்பந்தமான பிரச்னைகளை அச்சங்கத்துடன் கலந்தாலோசிக்கலாம்.

உணவு உற்பத்தி அதிகரிக்கப்படுவது எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு மிக்க அவசியம். எனவே குறுகியகால உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்துக்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாற்சபையின் தோற்றம்

**தினசரி விற்பனை : 36 ஆயிரம் பைந்துகள்**

நியாயமான விலையில் நல்ல சுத்தமான பால் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற சிறந்த நோக்கத்துடன் 1954 ம் ஆண்டின் 12 ம் இலக்க பாற்சபைச் சட்டத்தின் கீழ் தேசிய பாற்சபை நிறுவப் பட்டது. மலிவான விலையில் பால் உற்பத்தி செய் யப்பட வேண்டும் ; உற்பத்தியாகும் பாலுக்கு நல்ல விற்பனை வசதிகள் இருக்க வேண்டும் என்பதும் பாற்சபை கொண்ட நோக்கங்களில் சிலவாம்.

இன்று பாற்சபை இலங்கையின் பல பாகங்களி லும் விற்பனைக்கான பாலை சுத்திகரிக்கும் நிலையங் களை நிறுவியிருக்கிறது. 1955 ம் ஆண்டில் கம்பளை யிலும் நாத்தாண்டியிலும் இரு சுத்திகரிக்கும் நிலை யங்கள் நிறுவப்பட்டன. அத்துடன் 1957 ல் நார ஹன்பிட்டியில் 45,000 சுத்திகரிக்கப்பட்ட பாலைத் தயாரிக்கவல்ல ஒரு மத்திய பாற்றொழிற்சாலையும் நிறுவப்பட்டது. 1958 ல் பொல்ஹாவலையிலும், 1959 ல் கோட்டகலை, காலி ஆகிய இடங்களிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. பலாங் கொடையில் 1961 ல் இவ்வித நிலையம் நிறுவப் பட்டது. இவ்வருடம் குண்டசாலையிலும் ஒரு பால் நிலையம் நிறுவப்பெற்றிருக்கிறது. வெளியூர் நிலை யங்களில் இன்று தயாராகும் மொத்தப் பாலின் அளவு தினசரி 76,000 பைந்துகளாகும்.

கொழும்பிலுள்ள பால் நிலையத்தில் தினசரி 45,000 பைந்து பாலை பாஸ்ச்சர் முறையில் தயாரிக் கலாம். அத்துடன் 10,000 பைந்து பாலை ஸ்டெரி லைஸ் முறையில் தயாரிக்கலாம். இப்பொழுது தின சரி 30,000 பைந்து பால் இங்கு மொத்தமாகக் கையாளப்படுகிறது. பால் பழுதடையாது இருப்பதை உறுதிப்படுத்தவும் மாகாணங்களில் பாற்றொழிலை விருத்தி செய்யவும் பாற்சபை 1959 ன் பிற்பகுதி யில் இலங்கையின் பல பாகங்களிலும் பாற் சேகரிப்பு நிலையங்களையும், பாலைக் குளிர்ப்படுத்தும் நிலையங் களையும் நிறுவத் தீர்மானித்தது.

பாற்சபை இப்பொழுது தினசரி 36,000 பைந்து பாஸ்ச்சர் பாலை விற்பனை செய்கிறது. அத்துடன் மாதந்தோறும் 100,000 ஸ்டெரிலைஸ்ட் பாலையும் பாற் சபை விற்கிறது. கொழும்பு, களுத்துறை, கண்டி, கம்பளை, குரன, சிலாபம், பொல்காவலை, மினுவன்கொடை, ஹட்டன், குருணுகலை, புசெல் லாவை, புத்தளம், நாவலப்பிட்டி, கோட்டகலை, அம்பலாங்கொடை, தலவாக்கொல்லை, நீர்கொழு ம்பு, வியாங்கொடை, கேகாலை, டியத்தலாவை, அனுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், நாகம்மலை, பதுளை என்னும் இடங் களில் பாற் சபை இப்பொழுது பால் விற்பனை வசதிகளைச் செய்திருக்கிறது. அத்துடன் கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கும் பாற்சபை பால் வழங்குகிறது. மேலும் இலங்கையிற் பல பகுதிகளிலுமுள்ள 25 ஆஸ்பத்திரிகளுக்கு ஸ்டெரிலைஸ்ட் பாலையும் பாற் சபை கொடுக்கிறது.

பாற்சபை ஐஸ்கிரீம், பட்டர் ஆகியவற்றையும் ஆஸ் பத்திரிகளுக்கு விநியோகிக்கிறது. பொதுமக்களுக் கும் ஒரு குறிப்பிட்ட அளவு பட்டரை பாற்சபை விற்கிறது.

பாற்சபை 40 லட்சம் ரூபாவை வருடந்தோறும் பால் வாங்கச் செலவிடுகிறது. இத்தொகை கிராம வாசிகள் கைக்கு மாறி அவர்கள் மிடியைப் போக்கி அவர்களுக்கு பாற்பண்ணைகளை நடத்த ஊக்கத்தை அளிக்கிறது.

ஆரம்பத்தில் பாற்சபை நஷ்டத்திலே நடப்பது தவிர்க்க முடியாததாய் இருக்கிறது. நாரஹென் பிட்டியிலுள்ள மத்திய பாற்பண்ணையும் வெளி யூர்களிலுள்ள பாஸ்ச்சர் நிலையம் முதலியனவும் முழு அளவில் வேலை செய்யும் வரை இந்நிலை இருக்கும். பாற்சபை நிலையங்கள் முழு அளவில் இயங்க முடியாததற்குக் காரணம் பாலுக்கு இருக் கும் குறைந்த விற்பனை வசதியாகும். இதன் கார ணமாக நாரஹென்பிட்டியில் தயாரான பால் கூட தேவைக்கு மேலதிகமாகி விட்டது. இவ்விதம் மேல திகமான பால் பட்டராகவும், நெய்யாகவும் தயாரிக் கப்பட்டது.

இந்நிலை இவ்வளவு மோசமானதற்கு ஒரு கார ணம் பெருந் தொகை பால் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதாகும். புட்டிப் பாலும், கிரீம் பால், ஸ்கிம் பால் பவுடர்களும் பசும் பாலைவிட மலிவான விலையில் கிடைக்கிறது. இதன் காரணமாகவும் நீண்ட நாள் வைத்திருக்கும் வசதிக் காகவும் இவ்வகைப் பவுடர்கள் பசும்பாலை விட அதிகமாக விரும்பப்படுகின்றன.

(7 ம் பக்கம் பார்க்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசினர் கூட்டுத் தாபனங்கள்

## பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்

எரி சோடா, குளோறின், டி.டி.ரி., கந்தக அமிலம் ஆகிய இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிற்சாலையை நிறுவுவதென இலங்கை அரசாங்கம் 1951 ம் ஆண்டில் தீர்மானித்தது. அதற்கு 13,087,200 ரூபா செலவாகுமெனக் கணக்கிடப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியான டி.டி.ரி. இயந்திரங்கள், சர்வதேசக் குழந்தைகளின் அவசரகால நிதியிலிருந்து கிடைத்த பணத்தாலும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியோடும் கிடைக்கப்பெற்றன. தொழிற்சாலை நிர்மாணிப்பதற்குப் பரந்தன் உகந்த இடமெனத் தீர்மானிக்கப்பட்டு 1952 ம் ஆண்டில் வேலைகள் ஆரம்பமாகின. இத் தொழிற்சாலைக்கு உப்பு பிரதான மூலப் பொருளாய் இருப்பதால் தேவையான உப்பை பரந்தனிலிருந்து $3\frac{1}{2}$ மைல் தூரத்தில் உள்ள ஆனையிறவு உப்பளங்களிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கிறது.

1956 ம் ஆண்டில், இலங்கை எண்ணெய், கொழுப்பு, கூட்டு ஸ்தாபனத்தில் கொழுப்புத் தன்மையுள்ள மதுசார உற்பத்தியில் உபயோகிக்கப்பட்ட இயந்திரம் இந்த இரசாயனத் தொழிற்சாலைக்கு மாற்றப்பட்டது. இதன்பின்னர், இத்தொழிற்சாலை 1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க அரசாங்கத் தொழிற் கூட்டு ஸ்தாபனங்களின் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

டி.டி.ரி. தயாரிப்பதற்கு உற்பத்திச் செலவுகள் அதிகரிக்குமென எதிர்பார்த்தமையாலும், அதன் கிராக்கி குன்றி வருகிறதெனத் தெரிந்தமையாலும் 1956 ம் ஆண்டில் டி.டி.ரி. இயந்திரங்களைத் திருப்பிக் கொடுத்துவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பின்னர் உற்பத்தியைத் தொடங்குவதென எண்ணி 1960 ம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் வேலைகள் ஆரம்பமாயின. தற்போது தொழிற்சாலையில் எரிசோடாவும் குளோறினும் உற்பத்தியாக்கப்படுகின்றன. கந்தக அமிலமும், ஐதரோகுளோறிக் அமிலமும் கூடிய விரைவில் தயாராகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தொழிற்சாலையில் கூலியாட்களாக 174 பேரும், பரிபாலன தொழில்நுட்ப வேலைகளில் 62 பேரும் கடமையாற்றுகிறார்கள். இங்கு தேவைப்படும் மூலப் பொருளான உப்பு ஆனையிறவிலிருந்து பெறப்படுகிறது.

இலங்கைக்கு ஆண்டு தோறும் 160 தொன் குளோறின் தேவைப்படுகிறது. இதன் பெறுமதி ரூபா 400,000 ஆகும். இரசாயனத் தொழிற்சாலையின் உற்பத்தி எமது தேவைகளுக்கும் மேலதிகமாயிருப்பதால் குளோறினை இறக்குமதிசெய்ய வேண்டிய தேவையில்லை. எம் மேலதிக உற்பத்தியை உபயோகப்படுத்தக்கூடிய வழிவகைகள் ஆராயப்பட்டு வருகின்றன. புடவை, காகிதத் தொழிற்சாலைகள்தான் குளோறினை அதிக அளவில் உபயோகிக்கின்றன. இவ் விரண்டும் எமது பத்தாண்டுத் திட்டத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கின்றன. வருங்காலத்தில் எமது மேலதிக குளோறின் உற்பத்தி முழுவதையும் இத் தொழிற்சாலைகளே உபயோகிக்கக் கூடிய நிலை கட்டாயம் ஏற்படும்.

தற்போது உற்பத்தியாக்கப்படும் எரிசோடா இலங்கையின் தேவையிற் கால் பகுதியையே பூர்த்தி செய்கிறது. இதன் உற்பத்தி கூடிய விரைவில் இரட்டிக்கப்படவிருக்கிறது. நாட்டுக்குத் தேவையான முழு எரிசோடாவும் இங்கேயே உட்பத்தியாக்கப் பட்டால் அதனால் எமக்கு ஒரு கோடியே தொண்ணூறு இலட்சம் ரூபா மீதமாகும்.

ஐதரோ குளோரிக் அமிலம், கந்தக அமிலம் ஆகியனவற்றை உற்பத்தியாக்கும் இயந்திரங்கள் அமைக்கப்படுவது, இவ்வாண்டில் பூர்த்தியாகி விடும். இவ் வியந்திரங்கள் ஆண்டுதோறும் 1,800 தொன் ஐதரோகுளோறிக் அமிலத்தையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3,000 தொன் கந்தக அமிலத்தையும் உற்பத்தி செய்யும். இவற்றிலிருந்து டை கல்சியம் பொஸ் பேற்றும் சுப்பர் பொஸ்பேற்றும் தயாரிக்கப்பட்டு விவசாயத் துறையில் உரமாகப் பாவிக்கப்பட லாம். அத்தகைய உரங்களை கரும்பு, புகையிலை போன்ற சிறு பயிர்களின் செய்கையை அபிவிருத்தி செய்யும். இதனுல் ஆண்டு தோறும் சுமார் 7,000 தொன் சுப்பர் பொஸ்பேற் உபயோகமாக்கப்படும்.

பரந்தன் தொழிற்சாலை 1960 ம் ஆண்டுதான் உற்பத்தியைத் தொடங்கிற்று. தொழிற்சாலை சரிவர இயங்குவதற்குப் பல தடைகள் ஏற் பட்டன. தற்போது கூட்டுத் தாபனம் நிலைமையை முற்றுகச் சீர்தூக்கிப் பார்த்து உற்பத்தித் திட்டங் களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக இத்தொழிற்சாலை கூடிய விரைவில் இலாபம் காட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இரசாயனத் தொழிலுக்கு உலகச் சந்தையில் நல்ல எதிர்காலம் இருக்கிற தென்பதை நாம் மறந்துவிடப்படாது. தென் கிழக்காசியாவிலேயே நாம் இத் துறையில் தலைசிறந்தவர்களாக விளங்கி எமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்து அதன்மூலம் பெரும் இலாபத்தையும் அடையலாம். இலங்கை யில் தொழில் வளர்ச்சிக் கேற்ற மூலப்பொருட் கள் போதியளவு இல்லாத குறையை இத் தொழிற் சாலை இயற்கையாக, மலிவாகப் பெறக்கூடிய உப்பு, உவர்க்களி, சீனி உற்பத்தியின் உப பொருளான மதுசாரம் ஆகியவற்றைக் கொண்டு இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்வதால் பெருமளவு நிவர்த்தி செய்யலாம். அதுவுமல்லாமல் மற்றும் தொழில்கள் கூட இத்தொழிலையே அநேகமாக எதிர்பார்த்து இருக்க வேண்டிய நிலையும் உண்டாக லாம்.

---

## பாற்சபையின் தோற்றம்

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் சுகாதாரப் பகுதியின் ஸ்கிம் பால் விநி யோக நிலையங்கள் சிலவற்றை புதிய பசும்பால் விநியோக நிலையங்களாக ஆக்கியமை இந்த நிலை மையை மாற்றியிருக்கிறது. இதன் பயனுக பாற் சபையின் மேலதிக பாலுக்கு விநியோக வசதி ஏற்பட்டிருக்கிறது.

முழுக் கிரீம் பால் பவுடர் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை 15 லட்சம் ரூபா செலவில் நுவரேலி யாவில் நிறுவப்பட இருக்கிறது. இங்கு வருடந் தோறும் 14 லட்சம் ருத்தல் பால் பவுடர் தயாரிக் கப்படும். இப்பொழுது 70 லட்சம் ரூபா பெறுமதி யான முழுக் கிரீம் பால் பவுடர் இலங்கையில் இறக்குமதியாகிறது. ஆகவே இப்பால் பவுடர் தொழிற்சாலை எமது வெளிநாட்டு நாணயத்தைச் சேமிக்க உதவுவதோடு பாற்பண்ணைத் தொழிலை விருத்தி செய்யவும் உதவும்.

இன்னும் இரு பால் சுத்திகரிப்பு நிலையங்கள் பதுளையிலும், அனுராதபுரத்திலும் நிறுவப்பட இருக் கின்றன.

குழந்தைகளுக்கான விட்டாமில்க் பவுடரை பெட்டி களில் அடைக்கும் வேலையை இங்கேயே நடத்த ஒரு தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது. நியூ சீலந்தில் தயாராகும் விட்டாமில்க் நியூசீலந்தின் பாற்பண்ணை உற்பத்தி விற்பனைச் சபையின் ஒத் துழைப்போடு இங்கு பெட்டிகளில் அடைக்கப்படும்.

பாற்சபை புட்டிப்பால் தொழிற்சாலை ஒன்றை தம்மன்கடவையில் நிறுவவும் ஏற்பாடு செய்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமனை குடிபுகுதல்

நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்

*புலவர் அவர்களின் புதுமனைகுடி புகுதல் விழாவிற்கு அவர்கள் உடன்பிறந்தார் **திரு. க. வேலுப்பிள்ளை** அவர்கள் சென்று கண்டு களி கொள்ள முடியாது போயிற்று. எனினும் நேரிற் கண்டதுபோலவே படித்தின்புற வேண்டும் என்னும் உளங்கனிந்த அன்பால் புலவர் அவர்கள் பின்வரும் அருமைக் கடிதத்திற் சொல்லோ வியமாகத் தீட்டி அனுப்பினார்கள் அந்த வைபவம் முழுவதையும். இவ்வரும் பெருஞ் செல்வத்தைப் பாதுகாத்து வைத்திருந்து ஸ்ரீ லங்காவில் வெளியிட அதன் பிரதியைத் தந்துதவிய திரு. க. வேலுப்பிள்ளை அவர்களுக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுளது. எங்கள் மனமார்ந் நன்றியையும் கூற விருக்குகின்றும்.*

காப்பு

பொன்னேங்கு செல்வப் புதுமனையி லேபுகுந்து
மன்னேங்க வாழும் வகையுரைக்க—முன்னேங்கு
தும்பிமா வத்திரனே தூயதமிழ்ச் சொல்லருளென்
தம்பிவா சித்துணரத் தான்—

வண்டழிடேர் தம்பி மகிழ்ந்துவா சித்துநகை
கொண்டு களிப்புற்றுக் குதுகுலிக்கப்—பண்டொரு நாள்
துங்கக் குறுமுனிக்குச் சொல்லிவைத்த—மெல்லியற் சொல்
சங்கத் தமிழ்முருகா தா.

அன்னமே தேனே யமுதேயென் னுருயிரே
வன்னமே வுங்கமல வாணியே—யென்னுடைய
நாவிருந்து பாமொழிந்து நம்பிதிரு நாவிருந்து
நீவிருந்து கொள்க நிதம்.

சீர்கொண்ட கொண்டற் றிறங்கொண்ட செம்மேனி
மார்கொண்ட பொன்னவனும் வாணியனும்—போர் கொண்டு
கட்டாரு மேனமாய்க் காமரன மாய்த்தேடத்
தட்டா துயர்ந்த தனிப்பெருமான்—இட்டமுள

தந்தையின்றி யுற்பவித்துத் தாயின்றி யேபிறந்த
விந்தைமிகு சுந்தர வியன்பெருமான்—முந்திவரு
செங்கனக மன்றிடத்துத் தித்தியென நிர்த்தமிடு
தங்கனகச் செங்கைவரித் தண்டவரான்—துங்கமிகு
தங்கச் சிலைபிடித்துத் தான்வெள்ளி மீதிருந்தும்
எங்கு மலைந்துபிச்சை யேற்றபிரான் —பங்கமிலா
வாலின்கீழ் நால்வர்க் கறங்கரைந்தோ ரம்பலத்தில்
கோலமிகு மாடெடுத்துக் கொண்டபிரான்—பாலின் றிக்
கிட்டிவரு பன்றிகட்குக் கேடிலனை யாயேனக்
குட்டியொன்றை கண்பார்த்துக் கொன்றபிரான்— விட்ட
முனியென் றிடத்தில் முடித்தலையிற் பெண்கள்
நனியொன்ற வேற்று நயந்தோன்—துனியொன்று
காரிருளை யீருங் கதிர்ஞாயி றுன்கங்குல்
சேரிருடீர் ஞானகலைத் திங்களான்—சீரிருக்கும்
செவ்வாய் நகையாற் றிரிபுரஞ்செற் றேன்சற்றும்
பொய்வாயி லார்க்கற் புதனுனேன்—பைவாயின்
மேவியா ழத்தனுரை வெள்ளிப் பருப்பதத்தன்
பாவியார்க் கேறசனிப் பண்பானேன்—பூவியலும்
பாதத்தாற் கூற்றைப் படவுதைத்து ராவணனைக்
கீதத்தா லாண்ட இருபையான்—நாதத்தான்
விந்துவான் சத்திசிவன் மேவுசா தாக்கியத்தான்
தந்த மகேசுவர தத்துவத்தான்—இந்துவான்
தாங்குஞ் சடையுஞ் சதுர்ப்புயமுங் கார்மிடறு
மோங்கு முருத்திரநற் றத்துவத்தான்—ஈங்கண்டம்
காக்கும் வைகுந்தக் கதியுடையான் பூவெல்லா
மாக்குஞ் சிருட்டிக் கதிபதியான்—தூக்குந்
தவந்தருசீர் ஞானியர்க டாமுணர்ந்து போற்று
நவந்தருபே தங்க ணயந்தோன்—உவந்தளித்த
ஆனை முகத்தானை யைந்து கரத்தானைப்
பானை—யகத் தானைப் பழையோனைச்—சோனையென
வந்தவினை தீர்த்தியென மண்ணினெடு விண்டுதிக்குஞ்
சுந்தர விநாயகனைச் சோதியனை—நைந்துருகி
மோதகத்தை யீருபவர் முற்பிறப்பிற் செய்தபெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகத்தை பீரும் பரம்பொருளைத்—தீதகற்றிச்
சார்க்கரைபிட் டீகுநர் தமைச்சனன சாகரத்தி
னக்கரைவிட் டின்பருளு மற்புதனை—விக்கவிக்க
அப்பமவல் முப்பழமு மெட்கசியும் முக்கனியும்
தொப்பைவயி றுப்புவுப்பத்துப்த் திறங்கப்—பொற்
புடனே
தொக்கணக திக்கணக தொந்திமிதிமிந்திமிதியென்
றக்கண நடித்தரு ளருட்குணனை—முக்கணப்பன்
பிட்டுவந்து மாறன் பிரம்படிமுன் பட்டபடி
குட்டுவந்து ஞானங் கொடுப்பானை—இட்டமுடன்
காரார் கருதடியக் காட்சிதரு மானினகர்ப்
பேரார் மருதடியிற் பெம்மானை—ஆராத
காதலுடன் போற்றியிரு கைதொழுது மெய்வணங்கி
யோதலுட னுள்ளே தியானித்துப்—போதமிகு
மஞ்சுமுக னெற்றிவிழி யங்கிதரு மாறுமுகச்
செஞ்சுடரை ஞான சிகாமணியைக்—கொஞ்சியுமை
பாலூட்டித் தாலாட்டிப் பாராட்ட மற்றவட்கு
மாலூட்டி வைகு மருட்குருந்தை—பாலூட்டுஞ்
சின்ன வயதிற் றிசைமுகனைக் குட்டியரன்
தன்னை—யுப தேசித்த சற்குருவை—முன்னமொரு
மாங்கனிக்கு வீங்குகடல் வையமுற்றுஞ் சுற்றிவரு
தீங்கனியைத் தேனைநறுந் தெள்ளமுதை—
யோங்கனிகர்
பன்னிரண்டு தோளுமெழிற் பைந்தொடியார்பாகமு
மாய்
என்னிரண்டு கண்ணிருக்கு மெம்முயிரைத்—தன்னி
ரண்டு
தாளைத் தலைமேலே தந்துசஞ்ச லம்புகுந்த
வேளைக் குதவுவடி வேலவனை—நாளைக்கு
மின்றைக்கு மூவா விளையோனை—என்றைக்கும்
கந்தா முருகா கதிர்வேலா வென்றரற்ற
வந்தா தரிக்குமருள் வானவனை—என்றுயைத்
தந்தையைச் சேயைச் சகோதரரைச்—சந்ததமும்
தன்னை யடைந்தோரைத் தானடைந்து வெம்பிறவி
பின்னையடை யாதணைக்கும் பெற்றியனை—என்னை
வலியவந்தாட் கொண்டென்ன மாற்றங்கேட்டாலுஞ்
சலியாதீ கற்ப தருவை—விலையி
லதிமதுரச் செந்தமிழ்பா வாற்றுதிக்கக் கேட்டு
குதுகுலங்கொண்டின்படையுங் சோவை—விதுவதனச்
சஞ்சரிகஞ் சஞ்சரிபூ மஞ்சரிவேய் மஞ்சளகக்
குஞ்சரிதோள் துஞ்சுமருட் கோமானை—வஞ்சியிடை
அஞ்சநடைக் கஞ்சவிழி யம்பவளக் கிஞ்சுகவாய்க்
கொஞ்சுமொழிப் பஞ்சினடிக் கும்பமுலை—விஞ்சு
மெழில்
வெண்டரள பந்திநகை மின்றெடரு மஞ்சுநிகர்
தண்டரள விண்டைபுனை தாழ்குழலும் கொண்ட
தொரு
சடசட வொலிமிகு தடவரை யதிபதி
யடல்கெழு புளினர்க ளதிபதி—விடநிகர்
தும்பிவலி நம்பிமிகு மன்பினுருப் பைங்கணுழை
அம்புவிது திக்கவரு மம்பிணையை—வம்பின்
வனவேங்கை யாகி மறைந்து பிடித்துத்
தனதாக்கி யாள்தலைவன் றன்னைப்—புனமானைக்
கொண்டுசெலப் பண்டணைந்த குஞ்சரிம னம்வெ
ருண்டு
மண்டுசினங் கொண்டிதென்ன வறென்ன—
வொண்டொடியே

அப்பன் கரத்தி லழகுமான் கன்றதனுக்
கொப்பான மான்கன் லுளம்விரும்பி—இப்பொழுதே
குன்றக் குறவர் திணைக்கொல்லை புக்கொருமான்
கன்றைப் பிடித்துவந்தேன் காணென்ன—நன்று
சொன்னீர்

அண்டத் தொருமா னரிவையுரு வாகிவரக்
கண்டதுண்டோ நல்லகதை காணுமென—விண்டி
டில்நீ
ஆணைக்கன் றேர்மடந்தை யாகினு லாகாதோ
மானைக்கன் றிந்த வடிவென்ன—ஆனாலும்
சும்மாசொல் லாதுண்மை சொல்லுமென வுண்ணுணை
அம்மான் மகளிவள்கா ணுமென்ன—அம்மான்
மகளாயி னும்முடைய மைத்துனிகா னென்ன
விகழாதுன் றங்கை திவளென—மகிழ்வாகக்
குஞ்சரி மனந்திருத்திக் குன்றவல்லி யைப் பொருத்தி
வஞ்சமுழு தும்மகிழ வைத்தானை—வெஞ்சமரிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றடபட வெனவதிர் சலதியொண் முடிமிசை
விடுமயி லசுருர மீது—படவவன்
மார்பைப் பிளக்க மயில்சேவ லாகிவரப்
பார்வையா லாண்ட பரம்பொருளை—நேர்மையார்
சிட்டர்தமைக் காத்துவெகு தியர்தமை நேயமுட
னட் ருள மட்டகிரி யம்மானை—உட்டெளிவால்
சிந்தித்துப் போற்றிச் சிரமிறக்கிக் கும்பிட்டு
வந்தித்து வாழ்த்தி நனிவாழ்ந்து—சிந்தைத்
திருக்களுக்கு மாதைச் சிவஞான மாதை
உருக்கிளரு மொண்படிக மாதைக் குருக்கமல
வெண்டவிசின் மாதையுயர் வேதமுதாலாகமமுந்
தண்டமிழுஞ் சொல்லுந் தனிமாதை—பண்டொரு
நாள்
பாவலரும் நாவலரும் பாடகரு மாடகரு
மேவலருஞ் சேர்ந்த வியன்சபையில்—மேவுவித்துப்
பூமாலை சூட்டுவித்துப் பொற்பிரசங் கம்பொழிவித்
தாமா மெனத்தலைக ளாட்டுவித்த—நாமாதைப்
பூமாதைப் பாமாதை பொன்மாதை பொன்மாதை
மாமாமி யென்ன மகிழ்மாதை—தேமாங்
கனியுங் கரும்பும் களிதேனுங் கட்டியு
முனியுஞ் சவைசேர் மொழியும்—பனிமதியும்
கஞ்சமும் வென்று கருணையுரு வாய்த்திரண்டு
வஞ்சமு மொன்று மலர்முகமும் —நஞ்சமும்
வேலுங் கணையுமலை மீனும் விளம்புமிவை
நாலுங் கடிந்ததிரு நாட்டமும்—பாலும்
அமுதும் பளிங்கு மரனிருப்பும் வெட்கி
முழுதுஞ் சிணுங்கு முருவும்—அமுதம்போல்
அஞ்சமஞ்சக் குஞ்சமஞ்ச வஞ்சிலம்பு கொஞ்சநெஞ்சு
பஞ்சுரஞ்ச வஞ்சுபத பங்கயமும்—வஞ்சி
இடையுஞ் சதுர்ப்புயமு மின்கதலி வாழைப்
தொடையுமா யென்னுவிற் றேன்றிட—மடைதிறந்த
வண்ணமென்ன வெண்ணமுன்னம் வன்னவன்னச்
செய்யுள்ளி
பெண்ணேயென்னை யன்னேயெனப் பெற்றவளை
—யின்னுமின்னும்

என்னவென்ன கன்னலன்ன மன்னுதமிழ் முன்னி
முன்னிச்
சொன்ன சொன்ன போதிலுமென் சொல்லடங்காக்
கன்னிதனை
நாவார வேத்தி மனமார வாழ்த்திவிதை
பூவாரத் தூவி யடிபுனைந்து—தேவாதி
தேவ னருளாற் சிரஞ்சீவி யாய்வாழு
மாவனப்பு வாய்ந்த வரவனுசன்—தூமனத்து
வேலா யுதநாம வித்தகன்வா சித்துணரத்
தோலாவெண் பாவிற் றெடுமாற்றம்—மேலான
ஐம்ப திரட்டிபர மாயு ளதிகீர்த்தி
துன்பமிலா வாழ்வு சுகபோகம்—இன்பசுகப்
பாலமனை பேறு பதினாறும் பெற்றிந்த
ஞாலமதில் நீடுழி நாள்வாழி—— ஏலவே
பொன்னேங்கு செல்வப் புதுமனைனில் வாழ்வுகந்த
மன்னேங்கு மாற்றம் வளங்கக்கேள்—மின்னேங்கு
மாதிடத்தா னம்பலத்தில் மாதிடங்கொன்டான
ருளுஞ்
சோதிடத்தா ஞராய்ந்து தூயமதி—ஓதாரல்
சேரிண்டு தேதி யெழிற்புந்தி வாரமிருள்
சேரிடப மூர்த்தம் திறமெமென்றே—வாரமுட
ணிச் சயஞ்செய்து நல்லநிலத் திற்பந்தர்த்
தூணிச் சலமாகத் தொட்டுநட்டு—வேலும்
மயிலு மெனவரைந்த வான்பலகை யார்க்கும்
பயில்வந் தனப்பலகை யோடு—மயலழித்த
மாசுப்ர மண்ணியன் வாழ்கவென வேவரைந்த

தேசிற் றிகழ்பலகை சேர்த்துப்பின்—வாசற்கண்
மைதிகழ்ந்த வத்திரங்கள் வைத்தசித்தி ரங்களுடன்
கொய்தரிந்த வெற்றிக் கொடிதூக்கி—துய்யமுகில்
வானத் தரம்பை மணித்தொடையை வென்றபிற
தானத் தரம்பை தனைநாட்டி—நானத்தா
லாகந் திருத்து மணியிழையார் கண்டம்போற்
பூகந் திருத்திப் பொலியநட்டு—மேகம்
விரும்புங் குழலியர்கள் மென்மொழிபோ லுள்ள
கரும்பு மிடையிடையே கட்டி—சுரும்பும்........

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P. ... O ROAD
NALLUR, JAFFNA
No........



# வரலாற்றில் மலாயா

புகழேந்திக் கரிகாலனர்

மலாயா நாட்டின் வரலாறு, ஒரு காலத்தில் கடல் பொங்கி எழுந்து கொள்ளை கொண்ட குமரிக்கண்டத்தின் வரலாற்றோடு துவங்கப்பெறும் பழம் பெருமை பொருந்திய வரலாறுகவிளங் குகிறது.

எண்பதினுயிரம் ஆண்டுகட்கு முன்னர், கன்னித் தென்கரைக்கு எதிரே ஒரு பூக்கண்டம் இருந்தது. அது தெற்கே ஆஸ்திரேலியா வரையும், மேற்கே தென்னுப்பிரிக்கா வரையும், கிழக்கே சாந்தா தீவுகள் வரையும் நீண்டகன்று கிடந்ததாம். இப்பூக் கண்டத்தின் கிழக்கு எல்லைகளில் மலாய் நாடும் இணைந்திருந்தது, என்று வரையறுத்துரைக்கப் பெற்றுள்ள கருத்தில் மலாய் நாடும் குமரிக்கண்டத்தை தொட்டுக்கொண்டிருந்த ஒரு பழந் தீவாக விளங்குகின்றது.

மக்கள் குலம் தோன்றி வளர்ந்து பன்னெடுங் காலத்திற்குப் பின்னர் பொங்கி எழுந்த கடலால் குமரிக் கண்டம் கொள்ளப்படலாயிற்று. இப் பேரழிவை அறிந்த மக்கள் குலம், அக்கண்டத்தி னின்றும் பெயர்ந்து வேறிடங்களை நோக்கி கூட்டம் கூட்டமாகச் செல்லலாயிற்று. இவ்வாறு நிலவிய குடியேற்றத்தால், செங்கடல் வழியே ஆப்பிரிக்கா வுக்குச் சென்ற மக்கள் ஆப்பிரிக்கராயினர் என்றும், நடு நிலக் கடலின் மேற்குக் கரை வழியே பாலஸ் தினத்தை அடைந்த மக்கள் பிசினியராயினர் என்றும், பாரசீகக் குடாக்கடல் வழியே சுமேரியா விற்கு சென்ற மக்கள் சுமேரியராயினர் என்றும் கிழக்குக் கரை நாடுகளில் குடியேறிய மக்கள் பல வகை மக்களாயினர் என்றும் கூறுவர்.

சாவா, சுமத்திரா முதலான நாடுகளின் வழியே மக்கள் சீனப்பகுதிகளுக்கும் குடியேறினர். சுமத்ரா வழியே சீனப்பகுதிகளுக்குக் குடியேற்றம் நிலவிய பொழுது, மலாய் நாட்டிலும்மக்கள் குடியேறினரா ? என இன்னும் வரலாற்று ஆராய்ச்சி தெளிவுற் றதாகத்தெரியவில்லை. சுமத்ராவிற்கும் சீனப் பகுதிகளுக்கும் இடையில் உள்ள மலாய் நாட்டில் குடியேற்றமே நிலவியிருக்காது என்ற வரலாற்றுர் கருத்தைப் பழம் பொருளாய்வுக் கழகம் தவிர்க்கும் என எதிர்பார்க்கிறோம். சாவாவில் குடியேற்றம் நிலவியதை, அங்குக்கண்டு எடுக்கப்பட்ட பழையம னித எலும்புக் கூடு நிரூபிக்கின்றது. கிழக்குக் கரைகளில் மக்கள் என்பு முதலான சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டதைக் காரணமாக அடிப்படையாக வைத்துத்தான் கிழக்குக் கரை நாடுகளில் குடியேற்றம் நிலவியதெனக் கூறுவாராயினர். இவ் வாறு நிலவிய குடியேற்றத்தின் பொழுதும் தமிழ் நாடும் மலாய் நாடும் இணைந்திருந்தன என்பர்.

மலாயா என்ற சொல் யாரைக் குறிக்கும் சொல் என்று இஞ்ஞான்று வழக்கு மிகுகின்றது. மலாயா என்பது மலையம் எனப் பொருதும் என்று ஓர் தமிழ் அறிஞரும், மலாயா என்ற சொல் யூனி லிருந்து "ஓடிவந்தவர்களை"க் குறிக்கும் சொல் என்றும், இது ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் மூங்கில்பட்டை ஒன்றில் எழுதப்பட்டிருக்கிறது என்றும் ஒரு மலாய் கலைஞரும் கூறுவாராயினர். இவ்விருவகை வழக்குகளில், மலாயா என்ற சொல் ஓடி வந்தவர்களைக் குறிக்கும் என்று கொள் வதற்கு, மூங்கில் பட்டையைத் தவிர, வேறு சான் றுகள் இல்லையாதலால் அக்கொள்கையை விடுப் போம். மலையம் என்ற சொல் மருவி மலாயா என்று வழங்கியிருத்தல் கூடும் எனத் துணியலாம். ஒரு மொழிச் சொல்லைப் பிறமொழி மக்கள் மருவியோ, திரித்தோ வழங்குதல் இயல்பு. கலிங்கன் என்ற பேரரசனின் பெயர் திரிந்து, மருவி கிலிங் என வழங்குவது போன்று, மலையம் என்ற செஞ்சொல் மலாயா என வழங்கியிருத்தல் துணிபு.

மலாயா என்ற சொல் மொழியியல் ஆய்வுப்படி நாட்டைக் குறிக்கும் சொல்லேயாகும். பழந் தமிழ்ச் சொல்லான மலையமும் இந்நாட்டின் நீண்டு கிடக்கும் மலைகளை உணர்த்தும் சொல்லாக விளங் குவதால், மலாயா என்ற சொல் எந்த மக்களையும் குறிக்கும் பெயர்ச்சொல் ஆகாது எனலாம். எந்த மொழியையும் குறிக்கும் பொருள் சொல் ஆகாது. எனவே, மலையம் என்ற தமிழ்ச் சொல் மருவி மலாயா என வழங்குவதால் அது, இடச் சொல் என்று கொள்ளும் கொள்கையே சாலச் சிறந்ததாகும்.

மலாய் நாடு காடடர்ந்து நீண்ட நிலமாயிருந்த பழங்காலத்தில் தமிழர் இங்கு குடியேறியதாக அறிகிறோம். கி. மு. 1400 ல் தமிழ் வணிகர் கலங்களோடு மலாயா வந்தனர், மலை, காடு முதலான காட்டுப் பகுதி கண்களுக்குத் தென்படவே சீன நாடு நோக்கிப்போய்விட்டனர். அவ் வணிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT ... ROAD
NALLUR, ... NA
No. ...



மக்கள் மலேயம் என்று இந்நாட்டைக்குறித்துச் சீன நாட்டில் பேசினர் என்றும், அச் சொல்லே வன்மை யுற்று வழங்கியது என்றும் கொள்வார். மேலும் தமிழ் வணிகர் கி.மு. 300 ல் பாபிலோனுக்கும், சுமேரியாவிற்கும் கலங்களில் பொருள் ஏற்றியது போலவே, கி.மு. 2600 ல் எகிப்துக்கும், கி.மு. 2400 ல் சீன நாட்டிற்கு முத்து, மிளகு முதலான பொருள்களை எடுத்துச் சென்றனர். இவ்வாறு நிகழ்ந்த வாணிகம் வளமுற்ற நாள்தொட்டு, முசிறி யிலிருந்தும் கொற்கையிலிருந்தும் தொண் டியிலிருந்தும் கிளம்பும் கலங்கள் மலாயா தீபகற் பத்திற்கு வந்தன. என்றும் அவை வந்து போன காலம் கி. மு. 1400 ல் என்றும் கூறுவர். மலேயம் என்ற இடச்சொல் பிறந்தகாலமும் அது வேயாகும்.

அதோடு தமிழ் வணிகர், சாவா சுமத்ரா, மலாயா முதலான நாடுகளோடும் வியாபாரம் நடத்தி வாழ்ந்தனர், என்று மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் இயற்றிய பழந்தமிழ்க்காப் பியங்களில் ஒன்முன மணிமேகலையும் கூறுகின்றது.

சோழ நாட்டு மக்கள் கரையோரங்களில் மட்டும் பிரயாணம் செய்தனர் அல்லர். அவர்கள் வங்கா ளக் குடாக் கடலைக்கடந்து கங்காநதி, ஐராவதி முகத்துவாரங்கட்குச் சென்றனர். இந்து மகாக்க டலைக் கடந்து மலாயா தீவுக் கூட்டங்களையும் அடைந் தனர் என்பர்.

மலாயா நாட்டிற்கு வந்த குடியேற்றக்காரர்கள் பூஜாங் நதிக்கரையில் ஒரு நகரத்தை அமைத்தனர். கலையழகு பொருந்திய கோவில் ஒன்றைக் கட்டி, வழிபடுவதற்குரிய முறையில் நீராழி மண்டபமும், படிக்கட்டுகளையுடைய கேணிகளும் அமைத்தனர். கோவில் எழுப்பி வழிபட்ட மக்கள், எவ் உருவை வைத்து வழி பட்டனர் என்பது தெரியவில்லை. கோவிலின் கலையழகு தமிழரின் கலையழகையும் கைத்திறனையும் காட்டுவதாய் உள்ளது. பூஜரங் நதிக்கரையில் அமைந்த அம் மாநகரம், உயர்ந்த நகர அமைப்பு முறையில் தழுவி அமைக்கப்பட் டதாகும். மக்கள் கூடி வாழ்ந்த ஊர்களும், வீடுகளும், ஊர்களைச் சுற்றி பல சிறிய வீதிகளும், நகரத்தோடு அமைந்த நெடிய வீதிகளும் இருந்த னவாம். அம் மக்களின் நாகரீகம் மூவாயிரத் திருநூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகும் என்பர் பழம்பொருளாய்வுக்கழக உறுப்பினர்.

பூஜாங் நதிக் கரையில் அமைந்த மாநகரும் விரிவடைந்து பெரிதாகலாயிற்று. வேளாண்மை செய்வதற்குப் போதிய நிலப்பரப்பு வாய்ந்த ஆற்றுப் பகுதிகள் யாவற்றையும் இணைத்து இலங்கசோகம் எனப்பெயரிட்டழைத்தனர். பூஜாங் நதிக் கரை யோரத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலை வளமாக்கி மலாயாவில் இலங்க சோகம் என்ற பெயரமைந்த நகரில் நாகரீக மக்களாக வாழ்ந்தனர். பன்னெடுங் காலத்திற்குப் பிறகு வந்த சீனநாட்டு மக்கள் தமிழர்வாழ்வையும், அவர்கள் அமைத்திருந்த மாநகரின் அழகையும், அமைப்பையும் கண்டு வியந்து போயினர். இலங்க சோகம் என்ற சொல்லை "லிங்-யா-சென்-கியா" என்று வழங்கினராம்.

இவ்வாறு நகரம் அமைத்து வாழ்ந்த தமிழர் பெர்லிஸ், கெடா முதலான இடங்களிலும் குடியேறி வாழலாயினர். மலாயா நோக்கி வந்த தமிழர் இம் மூன்று இடங்களிலும் பரவி நாகரீகத்தையும், கலாசாரத்தையும் மலாயாவிற்கே அள்ளி, அள்ளி வழங்கிய முதன் மக்கள் என்பதற்கு நிறையச் சான்றுகள் உண்டு.

கெடா என்று வழங்கும் இடம் பண்டைத் தமிழரால் "காழகம்" என்று செந்தமிழில் வழங் கப்பட்டது. இவ்விடம் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது. "மலாயாத் தமிழர் வரலாற்றில் தமிழர்கண்ட மூன்று இடங்களில் ஒன்முன "கெடா" தமிழர் துறைமுகப் பட்டினமா கும். தமிழ் நாட்டுப் பேரரசின் உரிமையோடு மலாயா வந்து போகும் கலங்கள் கெடாவில் அணி வகுத்து நிற்கும் காட்சி வரலாற்றில், கவின் பயக்கும் காட்சியாம். அத்தோடு தமிழ் நாட்டை நோக்கிநின்ற பதினேழு நாடுகளில் கெடாவும் ஒன்றும். இதை—

**சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங்
கலிங்கம் கங்கமதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த் தமிழ் சூழ்பதினேழ்புவி தா
மிவையே.**

என்று திவாகரம் கூறுகின்றது. தமிழர் வாழ்ந்த இடங்களைத் தமிழர் கூற மறந்தாலும் வரலாறு உரைக்க மறுத்தாலும், பழம் பொருளாய்வுக்கழகம் வெளியிடத் தயங்கினுலும் தமிழ் இலக்கியங்கள் கூறத் தயங்கா. தமிழர் வரலாறும், வாழ்ந்த குறிப்பும் எழுதி வைக்காத ஒருவகை இனமாகை யால், எதிர்காலத்தில் தமிழர் வாழ்க்கைக்குத் தமிழ் இலக்கியங்களே பெருந்துணையாம்.

(அரும்பு-பினங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன் யோகாஞ்சலி

நாவலர் தாசன்

1

தூதுவனாய் நின்றுயென் துணையு மானாய்
தொல்லுலகெல்லாம்நீங்கத் தொண்டு செய்தாய்
ஆதவனாய் அருளொளியாய் அருமைத் தாயாய்
அன்புள்ள தந்தையுமாய் குருவும் ஆனாய்
வேதமுமாய் வித்தைகளாய் விளங்கும் ஞான
விண்முதலே வினைநீக்கி ஆண்ட கோவே
மாதவனும் யோகமுனி வாழ்த்த வேண்டி
வந்திருந்தாய் சிவதொண்டன் நிலையம் தானே.

2

மனத்துள்ளே நின்றிட்டாய் மனமும் ஆனாய்
மன்மதபா ணங்களெனத் தூயா வண்ணம்
நினைத்துள்ளே கருணைபுரிந் தென்னை யாண்டாய்
நீநினைத்த இடமெல்லாம் நிறைந்து நின்றாய்
வனத்துள்ளே சென்றுதவம் செய்தல் நீத்து
வண்மையுடன் தன்நாட்டு மக்கள் வாழ
இனத்துள்ளே யிருந்துலக மெல்லாம் போற்ற
இருந்தவம்செய் சிவயோகன் வணங்கும் மூர்த்தி.

3

யோகியாய் இருந்திட்டாய் யோகர்க் கெல்லாம்
யோகத்தின் இருப்பிடமாய் முடிவும் ஆனாய்
தியாகியாய் சேவிக்கும் தொண்டன் ஆனாய்
சிவதொண்டின் பெருமையினைச் செப்ப வந்தாய்
போகியாய் இருப்பவர்க்குப் புவனம் தந்தாய்
பொறுப்பேற்று அவர்வாழத் தவம்நீ செய்தாய்
*"தாகி" யாய் தற்பரனாய் மௌனி யானாய்
தவத்திலுயர் சிவதொண்டன் கண்ட கோவே.

4

கல்வியெலாம் நீயானாய் கல்வி யானாய்
கலியுகவிஞ் ஞானமெலாம் கடந்து நின்றாய்
தொல்லைதரும் யுத்தங்கள் யாவும் வைத்தாய்
தோற்றுமடிந் திடுவார்வென் றிடுவாய் நீயே
எல்லையிலாக் கருணைபொழிந் திடுமென் கோவே
எழியனையும் ஆண்டருள எண்ணம் கொண்டாய்
பல்விகற்ப மாமுனது கூத்தைப் பாரில்
பகர்வதெவன் சிவதொண்டன் நிலையத் தேவே.

5

சிவதொண்டின் பெருமைதனைச் செப்ப வேண்டி
சிவதொண்டன் நாடெங்கும் செல்ல வைத்தாய்
சிவதொண்டர் பெருமையினைக் காட்ட வேண்டி
திருக்காந்த னாய்ச்சீடன் ஒருவன் பெற்றாய்
சிவதொண்டு சிறந்திடநன் னிலையம் செய்தாய்
"சிவஅனுபூதித் தமிழால்" சைவம் காத்தாய்
சிவதொண்டே உயர்தொண்டு மக்கள் தொண்டு
சிவம்வாழச் சிவலிங்கம் தந்தாய் போற்றி.

6

யோகத்தின் முழுமுதலே கர்ம யோகம்
முதலைந்து யோகமுமாய் முழுதும் ஆனாய்
தாகத்தின் சாந்திக்குத் தண்ணீர் ஆனாய்
தனைவருத்தும் பசிப்பிணிக்குச் சாதம் ஆனாய்
காகத்தின் கூட்டங்கள் போலப் பக்தர்
கட்டறுக்கத் தினந்தோறும் "தொண்டன்"செல்வர்
வேகத்தின் சுரம்தீர்க்கும் வித்தை சொல்லி
வீற்றிருக்கும் யோகலிங்க முகூர்த்தம் தானே.

7

"பொல்லாப்பொன் றில்லை"யெனப் புகட்டி நின்றாய்
புவியெல்லாம் கடைத்தேறும் பொன்வாக் காலே
"எல்லாம்முன் முடிந்தகா ரிய"மென் றிட்டாய்
எம்பெருமான் நடமாடுந் தெய்வம் அன்றோ
"எல்லாம்,ஓம், எல்லார்க்கும், ஓம்"என் றிட்டாய்
ஏசுகின்றாய் பேசுகின்றாய் எல்லாம் சொன்னாய்
கல்லாமற் கண்டறிந்தார் கடந்தார் சோகம்
கவியோக முனிவணங்கும் கடவு ளாரே.

8

நல்லூரில் தமிழ்மக்கள் நாளும் போற்றின்
நன்மையருள் பலவுண்டு நவின்றால் நம்பி
எல்லோரும் சிவதொண்டன் ஏகி ஏற்றின்
எங்கும் சாந்தம் மௌனம் அமைதியாகும்
பொல்லாதோர் செய்தபிழை பொறுத் தொறுத்து
புவிமீது அரசியலும் புரத்தல் செய்வோன்
இல்லாத சொல்லிடினும் இமயம் ஆனேன்
இன்பதுன்பம் யாவையுமாய் இருக்கும் கோனே

(22 ஆம் பக்கம் பார்க்க)

* தாகி—தாகீ—கீதா—பகவத்கீதை. பகவத்கீதையின் இரகசியம் பற்றிய பகவான் ரிஷி இராமக்கிருஷ்ணர் உபதேசத்தைத் தழுவிய சொல்லாக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாயாவில் பாவைக் கூத்து

மலாயாவில் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் பாவைக் கூத்து மிகப் பிரபலமாக இருந்துவருகிறது. திருமணம், குழந்தை பிறப்பு, அறுவடைக்கால விழா போன்ற சமயங்களில் இந்தப் பாவைக் கூத்து (வாயாங் கூலிட்) நடைபெறுவதுண்டு. கிளந்தானில் உள்ள கம்பங்களில் இந்தக் கூத்தைச் சர்வ சாதாரணமாகக் காணலாம். கோந்தாபாரு அம்யூஸ்மென்ட் பார்க்கில் ஒவ்வொரிரவும் இந்நிகழ்ச்சி இடம் பெறுவதுண்டு. "ஓயாங் சீயாங்", "ஓயாங் மெலாயு" என்னும் இருவகையான பாவைக் கூத்துக்கள் மலாயாவில் இருந்துவருகின்றன. இவ்விரு வகைகளும் ரிக்வேத காலத்திற்குப் பிந்திய இந்து இதிகாசங்களைத் தழுவிய கதைகளை அடிப்படையாகக் கொண்டவை.

பாவைக் கூத்து குத்திரதாரி "தோ டாலாங்" என்று அழைக்கப்படுகிறார். பன்னிரண்டு அடி நீளமும், பன்னிரண்டு அடி அகலமும் உள்ள ஒருமேடை, மூங்கில் கழிகளையும், பிளாச்சிகளையும் கொண்டு அமைக்கப்பட்டு, வெள்ளைத்திரை தொங்கவிடப்படும். அந்தத் திரையில்தான் பாவைகளின் நிழல் விழும்.

பாவைக் கூத்து, படலம் படலமாக நடைபெறும். ஒரு வாரம் வரைகூட அது நடைபெறுவதுண்டு. தோடாலாங் தமது உசிதப்படியும், இக்கலையின் தொன்றுதொட்டு வந்த பாரம்பரியப்படியும் கதைகளிற் சில மாற்றங்கள் செய்துகொள்வர். இராமாயண, மகாபாரதக், கதைகள்தாம் பாவைக் கூத்தில் முக்கிய அம்சங்களாய் இலங்கும். இராமாயணத்தில் இல்லாத பாத்திரமொன்று பாவைக் கூத்தில் இடம் பெறுவதுண்டு. அப்பாத்திரத்தின் பெயர் "பாடோகா" கூத்திலே உள்ள கோமாளியைப் போல்;

திரைக்குப் பின்னால் நான்கு அடி தள்ளி மையமாக தோடாலாங் என்னும் குத்திரதாரி உட்காருவார். எருமைத் தோலிலே எழுதப்பட்ட வண்ணச் சித்திரங்கள் (பாவைகள்) மூங்கிற் சிலம்புகளில் பொருத்தப்பெற்ற வாழை மரத்திலே செருகப்பட்டு அவர் முன்னால் இருக்கும். இந்தப் பாவைகளை அவர் உசிதம்போல் எடுத்து ஆட்டுவார். தலைக்கு உயரே எண்ணெய் விளக்கோ, மின்சார விளக்கோ இருக்கும். ஒலிபெருக்கியும் இருப்பதுண்டு. அவரது பாட்டுக்களுக்குத் துணையாக இசைக் கருவிகளைக் கையாள்வோரும் இருப்பார்கள்.

"ஓயாங் மெலாயு" என்னும் வகை கிளந்தானில் அதிகமாக நடைபெறுவதில்லை. "ராமன் இனு கார்த்திபதி" என்னும் கதையை அது அடிப்படையாகக் கொண்டது. "ஓயாங் சீயாம்" என்னும் வகைதான் இன்று பிரபலமடைந்திருக்கிறது. கூத்து தொடங்கப் பெறுவதற்கு முன்னர் இந்து முறைப்படி இறைவணக்கம் நடைபெறும். இந்தப் பாவைக் கூத்து இந்தியாவிலிருந்து சயாம் வழியாக மலாயாவுக்கு வந்திருப்பதால் மந்திரங்களெல்லாம் சயாமிய மொழியிலேயே கூறப்படுகின்றன. உணவுப் படையலை "போமோ" என்னும் மந்திரவாதி வைத்தியர் படைப்பார். பாவைக் கூத்திற்கு நல்லாசி தரும் வழிபாடாகவும் கெட்ட காற்றுப் படாமல் பாதுகாக்கும் மந்திரமாகவும் அது அமைகிறது.

பிறகு பாவைகளுக்கும் பூசை, நைவேத்தியம் நடைபெறும். அதற்குப் பிறகு தான் பா—டோகா தோன்றுவார். பாடோகா கடவுளின் புதிய அவதாரம் என்பது ஓர் ஐதீகம். கூத்தின் முதற்படலம் தொடங்கப் பெறுவதற்கு முன்னர் தோ டாலங் ஒரு பிரார்த்தனை செய்வார். பிறகுதான் உண்மையான கதை தொடங்கும். இராமரும், சீதா பிராட்டியும், அனுமானும், இராவணனும், சடாயுவும் இதர இராமாயணப் பாத்திரங்களும் வரிசை வரிசையாக வந்துபோவார்கள். காதல் கட்டங்கள் இரசனையாக இருக்கும். போர் நிகழ்ச்சிகளும் கடுமையாக நடைபெறும். திரைக்குப்பின்னால் வாத்திய இசைகளும், பாட்டுக்களும் முழங்க வெண்திரையில் நிழலாட்டக் காட்சி நடைபெறும்.

மலாயாவின் பழமையான இக்கலை கிழக்குக் கரையோரத்தில் இன்றும் நன்கு காப்பாற்றப்பட்டு வருகின்றது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கேலாலம்பூர்பூமலையில் நடைபெற்ற "பெஸ்டா" எனும் கலை விழாவில் இடம்பெற்ற இந்தப் பாவைக் கூத்து கிளந்தானுக்குத் தனிச் சிறப்பைத் தேடிக்கொடுத்தது. அண்மையில் கோத்தாபாரு சுவாரா மூடா கிளப்பின் கலைக் குழுவினர் கேலாலம்பூரில் பல இடங்களில் இக்கலையை வழங்கினர். இக்கலைக் குழுவில் "சே ரொகாணி முகம்மது அலி" என்னும் பெண் ஒருவரும் இருக்கிறார்.

அரும்பு (பினங்)

எங்கள் ஊர்

# கலை நகர்

திரு. நா. க. தங்கரத்தினம்

இந்து சமுத்திரத்தின் " இரத்தினக் கல் " என்று எல்லோராலும் போற்றிப் புகழப்படும் நம் இலங்கையன்னையை இணையற்ற ஒன்பது மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள் நம் மக்கள். இந்த ஒன்பது மாகாணங்களுள் எத்தனை எத்தனையோ நகரங்களையும், பட்டினங்களையும், சிற்றூர்களையும் தன்னகத்தே கொண்டு இந்து சமுத்திரத்தின் " திலகம் " என மிளிர்கின்றுள் நம் இலங்கையன்னை. இந்த ஒன்பது மாகாணங்களுள் வடமாகாணமும் ஒன்றாகும். இம்மாகாணம் யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்டு பரந்து விரிந்து கிடக்கும் பசுமை பொருந்திய பிரதேசமாகும்.

வடமாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்துக்கு மேற்கே 6 மைல் தூரத்தில் இருப்பது தான் வட்டுக்கோட்டை. வட்டுக்கோட்டையில் பல சிற்றூர்கள் உண்டு. இச் சிற்றூர்களில் சகல துறைகளிலும் தலை சிறந்து விளங்குவது கலைநகராகும். இது மேற்கே பிளவத்தையையும் கிழக்கே தாவளையையும், தெற்கே வட்டுக் கோட்டையையும், வடக்கே சித்தன்கேணியையும் எல்லைகளாகக் கொண்டு தனித்தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் வாழும் தனித்தமிழ்க் கிராமமாக மிளிர்கின்றது.

### இடப் பெயர்

பெரும்பான்மையான பெயர்கள் காரணப் பெயர்களாகவும், இடுகுறிப் பெயர்களாகவும் இருக்கின்றன. இவைபோல " கலைநகர் " என்னும் இப்பெயர் முதலில் " சிவன்கோவிலடி " என்று இருந்தது. இங்கு வாழும் மக்கள் ஓவியம், சிற்பம், நாடகம், நடனம் போன்ற இன்னோரன்ன சகலதுறைகளிலும் சிறந்து விளங்கியதால் " கலைநகர் " என்ற சிறந்த பெயரை நேருஜீ சன சமூக நிலையத்தார் 1958 ம் ஆண்டு வைத்திருக்கிறார்கள். தற்பொழுது இங்கு பிறக்கும் பிள்ளைகளுக்கும் " கலை " என்ற சொல்லை முன்னுக்கு வைத்துச் கலைமதி, கலைவாணி, கலைவதனி, கலைச்செல்வி, கலையழகன், கலைவாணன் போன்ற இன்னோரன்ன பெயர்களை வைக்கின்றார்கள்.

### தொழில் துறைகள்

இங்கு வாழ்கின்ற மக்களிற் சிலர் கட்டட வேலை செய்கிறார்கள். பலர் ஆசிரியர், வைத்தியம், எழுதுவினைஞர், அப்போதிக்கரி, என்ஜினியர், நகர்காவலர், இலங்கை விமானப்படை போன்ற இன்னோரன்ன அரசாங்க உத்தியோகத்தில் கடமையாற்றுகின்றனர். இங்கே பி.ஏ., பி.எஸ்ஸி., படித்தவர்களும் பலர் இருக்கின்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான், சங்கீதபூஷணம், இசைமணி போன்ற பட்டம் பெற்ற இசை ஆசிரியர்களும் புல்லாங்குழல், மிருதங்கம், வயலின் போன்றவற்றில் சிறந்த ஆசிரியர்களும் இருக்கின்றார்கள். இங்கு வாழும் கட்டட வேலைக்காரருள் அதிகமானோர் சிற்பவேலைக்காரராகவும் மிளிர்கின்றார்கள். ஓவியம் தீட்டுவதில் ஒப்பில்லாக்கலைஞர்கள் பலர் இங்கு வாழுகின்றனர். நாடகம், நாட்டியம், காவடியாட்டம், குதிரையாட்டம் போன்றவற்றுள் சிறந்த கலைஞர்களும் இருக்கின்றனர். ஆயுள்வேத வைத்திய கலாநிதிகளும் பலர் இங்கிருக்கின்றனர். அநேகர் இலவசமாக வைத்தியம் செய்கிறார்கள். புண் வைத்தியர்கள் இருவரும் இங்குண்டு. இவர்கள் காலை தொடங்கி மாலை வரை இலவசமாக வைத்தியம் செய்கின்றனர். இக் கிராமத்தின் மத்தியில் " றுத்தல் " என்ற பெயருடன் சிறு சந்தை ஒன்றும் அதைச் சுற்றிப் பல கடைகளும் உண்டு. இங்குள்ளவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக நண்பர் க. நாகப்பு அவர்கள் " ஏழையின் காதல் " என்ற நாவலையும் " காதலும் விளக்கமும் " என்ற ஆராய்ச்சிக் கட்டுரையையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். இன்னும் நாடகம் போன்ற பலவற்றையும் வெளியிட முயற்சித்து வருகிறார்கள். இவர்களைப் போல் மற்றவர்களும் முயற்சி எடுக்க வேண்டும்.

### ஜன சமூகமும் முன்னேற்றமும்

இக்கிராமம் மிகக் குறுகிய விஸ்தீரணம் உள்ளது. இங்கே அதிகமான மக்கள் வசிக்கின்றனர். அநேகமாக ஒவ்வொரு வீடுகளிலும் நாலு மூன்று குடும்பங்கள் ஒன்றாக இருந்து ஒட்டுக்குடித்தனம் நடத்துகின்றனர். இதற்கு இடவசதி குறைவாக இருப்பதே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தில் முன்பு இருந்ததுபோன்ற ஓலைக் கொட்டில்கள் மிகக் குறைவு. இப்பொழுது நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீடுகள் கல் வீடாகத் தோன்றியுள்ளன. நாற்பத்தைந்து குடிக்கு ஒரு கிணறாக இருந்த காலம் போய் இன்று வீட்டுக்கு வீடு கிணறுகள் வெட்டப்படு கின்றன. இன்றும் சில கிணறுகள் பத்துப் பன்னிரண்டு குடிகளுக்குப் பங்காக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றன.

இக்கிராமத்தின் மத்தியிலே வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும், திருநாவுக்கரசு வித்தியா சாலையும், அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கல வன் பாடசாலையும் நிறுவிக் கொடுத்து இளஞ் சிறுர்களைக் கல்வி கற்க ஊக்குவித்தும் வரு கிருர்கள். இங்குள்ள பெரியோர்கள் மாணவர் களின் கல்வி நலனுக்காக இந்து பரிபாலன சங்கம், காந்திஜீ சனசமூக நிலையம், நேருஜீ சன சமூக நிலையம் போன்றவற்றை உண்டு பண்ணி பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற இன்னோரன்னவற்றை தருவித்தும் வருகிருர்கள். வேலைக் களைப்பினால் சோர்வுற்றிருக்கும் பாட்டாளி மக்களுக்கு மகிழ்ச்சியையூட்டும் வகையில் மேற் படி நிலையங்களில் வானொலிப் பெட்டியை வைத்து இனிய பாடல்களை ஒலிபரப்பியும் வரு கின்றனர். மக்களுக்கும் குறைந்த விலையில் சகல சாமான்களும் கொடுக்கக் கூடிய "கூப்பன்" கடையை உண்டு பண்ணினர். பெண்களின் நன்மையைக் கருதி "மாதர் சங்கம்" ஒன்றும் அமைத்துள்ளனர். பெண்கள் ஓய்வு நேரங்களைக் கழிக்கும் பொருட்டும் நெசவு வேலைகளைப் படிக்கும் பொருட்டும் அகில இலங்கை ஆயுள் வேத வைத்திய சங்கத் தலைவரும் கிராமச் சங்கத் தலைவரும், சனசமூக நிலையப் போச கருமான வைத்திய கலாநிதி **திரு. அ. க. குமாரசுவாமி ஜே. பி.** அவர்கள் அரசாங்க உதவியுடன் தனது சொந்த வளவிலே சிறந்த வேலைப்பாடமைந்த "நெசவு நிலையம்" ஒன்றும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். நூற்றுக் கணக் கான மாணவிகள் அங்கு சென்று "நேரம் பொன்னுக்குச் சரி" என்பதற்கொப்ப நேரத்தை வீணாக்காது நெசவு வேலை செய்கின்றனர். நாடகம், நடனம் போன்ற கலைகளை வளர்ப் பதற்காகக் நேருஜீ நாடக மன்றம், நல்ல தம்பி நாடக சபா, நேருஜீ கலாமன்றம் போன்ற மன்றங்களை நிறுவியுள்ளனர். இம் மன்றங்கள் மூலம் இருபதுக்கு அதிகமான நாடகங்களை மேடையேற்றியுள்ளனர். நல்லதம்பி நாடக சபாவினர் தருமபுத்திர நாடகம், விராட நாடகம் போன்ற அழிந்துபோன நாட்டுக் கூத்துகளை நடித்துக் காட்டி மக்கள் மத்தியிலே நன்மதிப்புப் பெற்றுள்ளனர். நேருஜீ கலா மன்றத்தார் வருடாவருடம் கலைவிழாக்கள் நடத்தி வருகின்றனர். நேருஜீ நாடக மன்றத்தார் கடந்த வருடம் யாழ் மாவட்ட சன மூக நிலையங்களின் நாடகப் போட்டியில் "சேரன் செங்குட்டுவன்" என்ற நாடகத்தை, நடத்தி முதற் பரிசான வெள்ளிக் கிண்ணத்தையும் பெற்றுள்ளார்.

நேருஜீ நாடக மன்றத்தார் மோகன், நாம் மூவர், கலையின் விலை, சங்கிலியன், அனார்கலி, கலாவதி, அகல்யா, கன்னியின் கண்ணீர், தியாகச் சுடர், பெண்மனம், சேரன் செங்குட்டு வன் போன்ற குறிப்பிடத்தக்க இன்னோரன்ன நாடகங்களை மேடையேற்றி மக்கள் மத்தியிலே "சபாஷ்" பெற்றுள்ளனர். இங்குள்ளவர்களின் துணிகள், வெளுப்பதற்கு "லோண்டரி"யும் மயிர் வெட்டுவதற்குச் "சலூன்" ஒன்றும் இருக்கிறது. இலங்கையின் சுதந்திரத்தை முன்னிட்டு நடை பெற்ற மரதன் ஓட்டக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற வரும், கவிதை வளர்ச் சிக்கு அருந்தொண்டு ஆற்றியவரும்மான காலஞ் சென்ற முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர் களும் காலஞ்சென்ற ஈழகேசரி புகழ் பண்டிதர் கா. மாணிக்கம் அவர்களும் இங்கேயே பிறந்தவர்கள்.

### பண்பாடும் மொழியும்

இங்குள்ள மக்கள் அனைவரும் "திமிலர்" என் றும் "கரையார்" என்றும் அழைக்கப்படுகின்றனர். நான் "திமிலன்" என்று சொல்வதில் பெருமைப் படுவார்கள். இவர்கள் எந்தச் சமூகத்தவருக்கும் தலைகுனிய மாட்டார்கள். இவர்களுக்கு நல்ல தேகக் கட்டு உண்டு. இவர்களுடன் நேர்நின்று சண்டை செய்வது மிகக் கஷ்டம். இவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள். இவர்கள் தங்களுக்குள் தாங்கள் சண்டை செய்வார்கள். ஆனால், அன்னியருடன் சண்டை செய்யும்போது எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் போல ஒன்று சேர்ந்து விடு வார்கள். இவர்கள் பொது விஷயங்களிலும் கோ வில் விஷயங்களிலும், வாழ்வு, தாழ்வு (சாவு) ஏற்படும் நேரங்களிலும் தங்களுக்குள் இருக்கும் எவ்வித வித்தியாசத்தையும் மறந்து ஒன்று சேர்ந்து விஷயங்களை நடத்துவர். இங்கு வாழ்கின்றவர்கள் அனைவரும் சிறந்த சைவ சமயத்தவர்களாக விளங்குகிருர்கள். மற்றவர்கள் எல்லோரும் கிறிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... O ROAD
NALLUR, JA..NA
No



தவர்களாகி உத்தியோகம் எடுத்த காலத்தே எங்களுக்கு உத்தியோகம் வேண்டாம் சமயமே வேண்டும் என்று சைவசமயத்தைப் பேணிக் காப்பாற்றி வந்தவர்கள். இங்குள்ளவர்கள் அனைவரும் அழகாகத் தமிழ் பேசக் கூடியவர்கள். இவர்கள் தேனினும் இனிய தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்கள். இதனாலே வீட்டுக்கொரு தமிழாசிரியராகக் காணப்படுகின்றனர். இவர்கள் திருமண விஷயத்திலே கட்டுப்பாடுடையவர்கள். சைவ சமயத்தைப் தவிர மற்ற சமயத்தைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்ய மாட்டார்கள். இவர்கள் தங்கள் சாதியினரைவிட வேறு உயர்ந்த சாதியென்றாலும் தாழ்ந்த சாதியென்றாலும் திருமணம் செய்யமாட்டார்கள். கட்டுப்பாட்டை மீறி நடப்போரைச் சபை சந்திகளில் தள்ளிவைத்து விடுவார்கள்.

### இறை வழிபாடு

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றதற்கொப்ப இங்கு பல கோவில்களைக் கட்டியுள்ளனர். இக்கிராமத்தின் மத்தியிலே வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில், இலுப்பையடி முத்துமாரியம்மன் கோவில், சின்னக் கதிர்காமம், கம்பம் புலோக ஆதிவைரவ கோவில், சின்னம்மன் கோவில், முனியப்பர் கோவில், ஞான வைரவ கோவில், பத்திரகாளி கோவில், வீரபத்திர கோவில், வைரவ கோவில் (நாகமணி), வைரவ கோவில் (கனகசபை) பூதவிராய கோவில், வாலையம்மன் கோவில், வைரவ கோவில் (நா. கனகசபை), முருகையா கோவில், வைரவ கோவில் (ஆ. காசிப்பிள்ளை), முத்துமாரியம்மன் கோவில் (சடையர்), பிள்ளையார் கோவில், சர்வங்க சுமாமி கோவில் (அண்ணாவி முருகர்), வைரவ கோவில் (கந்தர்) போன்ற இருபத்தைந்துக்கு அதிகமான கோவில்கள் உண்டு. இங்குள்ளவர்கள் அனைவரும் சைவ சமயத்தவர்கள் என்பதற்கு இக்கோவில்களே சான்று பகர்கின்றன. இங்கே வாழும் மக்களுக்கெனப் பொதுக் கோவில்கள் ஒன்றும் இல்லை. இங்குள்ள கோவில்கள் எல்லாவற்றிலும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை தோறும் பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோவில்களில் மணிச் சத்தங்கள் இங்குள்ள மக்கள் அனைவரையும் நாலுமணிக்கே நித்திரைவிட்டு எழுப்பிவிடுகின்றன. இங்குள்ள கோவில்களில் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவபெருமான் கோவில் மிகப் பிரபல்யமானது. இக் கோவில் ஆனி மாதத்தில் திருவிழா ஆரம்பமாகி பதினொரு நாட்களுக்கு அலங்காரத் திருவிழாக்கள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன. இத் தினங்களில் இவ்வூர் மக்கள் ஆண்களும், பெண்களும் பக்திசிரத்தையோடு விரதம் பிடித்துக் கோவிலுக்குச் சென்று வணங்குவார்கள். இத்திருவிழாக்களுள் சில போட்டாபோட்டியாக நடைபெறும். 7 ம் திருவிழா என்றால்...... அப்பப்பா! சொல்லமுடியாது. தாலி கூறை விற்றாலென்ன, வீடு வாசல் விற்றாலென்ன சிறப்பாகத்தான் செய்யவேண்டுமென்று செய்வார்கள். பளார்! ..........பளார்! ......என்று வாண விளையாட்டுகளும் மேளக் கச்சேரியும் நடைபெறும் போதே "உலகத்திலே ஒரு புதுமை எங்கள் 7 ம் திருவிழாப் பெருமை" என்று பாடாவிட்டால் அவர்களுக்கு மனம் கேளாது. இத்திருவிழாவின் பத்தாவது நாள் தேர்த்திருவிழா நடைபெறும். இவ்விழாவன்று பக்தர்கள் காவடி ஆடியும், பக்திப் பாடல்கள் பாடியும், கற்பூரதீபங்கள் ஏற்றிக்கொண்டும் தேருக்கு முன் செல்வார்கள். பக்தர்கள் சிலர், ஆண்கள் பிரதட்சணம் பண்ணிக்கொண்டும், பெண்கள் சிலர் அடி அழித்துக் கொண்டும் செல்வார்கள். அடுத்த நாள் தீர்த்தத் திருவிழா நடைபெறும். இக்கோவிலில் எங்கும் இல்லாத சிறந்த அமைப்பான நடராசர் உருவம் இருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கோவிலுக்கு அருகாமையில் எழுந்தருளியிருக்கும் இலுப்பையடி முத்துமாரி அம்மன் கோவிலில் "ஆடு" வெட்டி வருகிறார்கள். இக்கோவிலில் இருநூறுக்கு மேற்பட்ட ஆடுகள் வருடந்தோறும் வெட்டப்பட்டு வருகின்றன. இதை நிறுத்துவதற்கு இளைஞர்கள் முயற்சி எடுத்துவருகின்றனர். இம் முயற்சி வரவேற்கத்தக்கது.

### விளையாட்டு

இங்குள்ளவர்கள் அனைவரும் விளையாட்டுக்களில் அதிக ஊக்கம் உள்ளவர்கள். கரபந்தாட்டத்தில் திறமையுள்ளவர்கள் பலர் இங்குளர். இங்குள்ள கரபந்தாட்டக் கழகங்களுள் சிவன் கோவிலடி கரபந்தாட்டக் கழகம் சிறந்தது. இவ்வூரில் கரபந்தாட்டம் ஒவ்வொருநாளும் நடைபெற்று வருகிறது. தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற நாட்களில் இரவு பகலாகக் கோலாட்டம், போர்த்தேங்காய் அடித்தல், ஊஞ்சல், கிளித்தட்டு மறித்தல், வாரடித்தல், தாச்சி மறித்தல் போன்ற விளையாட்டுக்கள் விளையாடி மகிழ்வார்கள். வருடந்தோறும் வட்டூர் "இளைஞர் மன்றத்தார்" விளையாட்டுப் போட்டி வைத்துப் பரிசில்கள் வழங்கி வருகிறார்கள். இன்னும் சில வருடத்துள் இக் கிராமம் சகல துறையிலும் முக்கிய இடத்தை வகிக்கும் என்பதற்கு ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுப் பண்ணைகள்

ச. சிதம்பரம்பிள்ளை

இலங்கை மக்களை இன்று பல பிரச்சினைகள் சூழ்ந்துள்ளன. அவற்றுள் அதிகமுக்கியமானது உணவுப் பிரச்சினையாகும். இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தத் தேவையான இயந்திரங்களையும் உபகரணங்களையும் இறக்குமதி செய்யப் பயன்படத்தக்க நாணயம் உணவுப் பொருள் இறக்குமதிக்குப் பெருமளவிற் செலவிடப்படுகின்றது. இலங்கையின் ஏற்றுமதிக்கான விளைபொருள்களைக் கொண்டு பண்டமாற்று முறையில் வியாபாரஞ் செய்வதில் விலைவாசிகளை நிதானப் படுத்திக் கொள்ளல் அசாத்தியம். விற்பனவுக்குரிய பொருள்கள், அவற்றிற்கு மானமுள்ள சந்தையில் விற்கப்படுதலும் கொள்வனவுக்கான பொருள்களை மலிவான சந்தையில் வேண்டுதலும் முன்னேற்றத்துக்குரிய வழிகள் ஆகும். விவசாய நாடான இலங்கையிலே முதலில் உணவுப் பொருள் இறக்குமதியைத் தடுத்தல் அல்லது குறைத்தல் முதற்படியாகக் கவனித்தற்குரியது.

பல பரிசோதனை நிலையங்களை அமைத்துப் பல ஆராய்ச்சிகளை நடாத்திச் சிக்கனமாக உண்டுபண்ணக் கூடிய விளைபொருள்களை அபிவிருத்தி செய்து, அவற்றைப் பெருமளவிற் பெருக்க அரசாங்கம் முயன்றுள்ளது: குடியானவர்களுக்குக் காணியைக் கொடுத்து அதனைப் பண்படுத்தப் பல உதவிகளும் புரிந்து, வசதியான இடங்களில் நீர்ப்பாசன ஒழுங்குகளைச் செய்து விளைபொருட்களுக்கு உத்தரவாத விலைகள் வழங்கி அவர்களை ஊக்குவித்துள்ளது. கமத்தொழிலில் முன்னேற்றம் ஓர் அளவுக்கு உண்டாயிற்றுயினும் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடான முறையிலே அது வளர்ச்சியுறவில்லை.

அரசாங்கம் முதலில் பரிசோதனை நிலையங்களில் நவீன செய்கைமுறைகளைப் பொது விவசாயிகட்குச் செய்து காட்டி வந்துளது. அது பின்னர் கிராமங்கள்தோறும் செய்து காட்டல் நிலையங்களை அமைத்துப் பிரசாரம் செய்து வந்துளது. பல குடியேற்றத் திட்டங்களையும், இளைஞர் விவசாயக் கழகங்களையும், கூட்டுப் பண்ணைகளையும் பிரசாரத்துறையில் அரசாங்கம் பயன்படுத்தியுள்ளது. குடியானவர்களின் பணமுடையையும் கடன்றொல்லைகளையும் போக்கவும், விளைபொருளாக்கத்தில் அவர்கட்கு உதவிபுரிந்து விளைபொருள்களைக் கொள்முதல் செய்யவும், அரசாங்கம், ஐக்கிய நாணய சங்கம், கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், கூட்டுறவுப் பலநோக்குச் சங்கம் ஆகிய தாபனங்களை அமைத்து வந்துளது. கூட்டுறவுத்துறையிலே சில பாற்பண்ணைகளும், கோழிப்பண்ணைகளும் முன்னேற்றமடைந்துள்ளன. எனினும் பயிர்ச் செய்கைத் துறையிலே கூட்டுறவுக் கொள்கைகள் இன்னும் பூரணமாகக் கைக்கொள்ளப்படவில்லையென்றே சொல்லலாம்.

கூட்டுறவுச் சங்கங்களை, வங்கி, வர்த்தகம், விவசாயம், தொழில், கைத்தொழில், குடிசைத்தொழில் ஆகிய துறைகட்கேற்ப வகுத்து அவ்வவற்றின் அபிவிருத்தியிலீடுபடும் அரசாங்கப் பகுதிகளாற் பரிபாலித்தல் அசாத்தியமாகும். ஒரு கிராமத்தில் வெவ்வேறு நோக்கங்களுடன் பல்வேறு சங்கங்களை அமைத்துப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்காமலிருக்கவே, பரந்த நோக்கங்களுடன் பலநோக்குச் சங்கம் அமைக்கப்படலாயிற்று. கூட்டுறவுப் பயிர்ச் செய்கையையும் தழுவிக்கொள்ள பலநோக்குச் சங்க அமைப்புப் போதுமானது.

தற்போதமே மேற்கோளாகவுள்ள பெரும்பாலான குடியானவர்கள் நிலச் சொந்தம் பாராட்டுவதிலும், சொந்தப் பயிர்ச் செய்கைப் பெருமை பேசுதலிலும் பல்லாண்டுகளாகப் பழகிவிட்டனர். இடைக்காலத்திலே அநேக தொழிலாளர் வசதிப்பட்டமையாலும், சுயநல எண்ணத்தாலும் விவசாயிகள் ஒருவருக்கொருவர் சரீரவுதவி புரிந்து பயிர் உண்டுபண்ணும் பழைய சமுதாயமுறை கைவிடப்படுதலாயிற்று. பல்வேறுபட்ட அபிப்பிராயங்களுடனும் அனுபவங்களுடனும் முன்னேற்றத்திற் கண்ணோட்டமின்றி உழைக்கும் விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கொள்கைகளே விமோசனமளிக்க வாய்த்தன.

கிராமங்களிலுள்ள விவசாயிகள் பொதுவாக வரவு செலவுக் கணக்குப் பதிந்து வைத்திருப்பதில்லை. தொழில் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான இத்துறையில் கூட்டுறவுப் பண்ணைகளே தக்க வழிகாட்டிகளாகவமைதல் வேண்டும்.

கூட்டுறவுப் பண்ணையமைப்பிலே நிலவுரிமை, காணிகளின் சொந்தக்காரரின் பேர்களிலேயேயிருக்கலாம். காணிக்காரரும் பிறரும் சேர்ந்து குத்தகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

முறையிற் பண்ணையை நாடாத்தலாம். தொழிலுக் கேற்றவாறு வருமானத்தைப் பங்கிட்டுக் கொள்ள லாம். இந்த இயக்கம் காணி பங்கீடுகளைக் குறைத் துப் பெரும் நிலப்பரப்புகளிற் சிக்கனமுறையிற் பண் ணைகளையமைத்து, நீர்ப்பாசனம், நல்லவிதைமணி, நவீன செய்கைமுறை, சிறந்த சேகரிப்பு, சந்தைப் படுத்தல் ஆகியவற்றைச் சாத்தியப்படுத்தவும், கடன் வசதிகள் வழங்கவும், இயந்திரசாதனங்களைப் பயன் படுத்தி இலாபகரமாக விளைபொருட்களை யாக்கவும் உதவும்.

காணித் தோம்புகள் எழுந்த காலந் தொட்டு இன்றுவரை பெரும்பாலான காணிகள் எவ்வெவ் வழிகளிற் கைமாறியுள்ளன என்பதைக் கவனிக் குமிடத்துக் குடியானவர்கள் சொந்தம் பாராட்டி ஆழ்ந்தபற்றுடன் காணிகளைக் கைநழுவவிடாமற் காத்து வந்ததற்கும், இலாப நட்டத்தைப் பொருட் படுத்தாது, முயற்சியை வேறு பொருளாக்கத்துறை களையமைப்பதிற் செலுத்தாது, கண்ணியமான வாழ்க் கை முறையெனக் கருதப்படும் கமத்தொழிலிற் பாடுபட்டு வந்ததற்குங் காரணங்கள் தெற்றனப்புல னாகும்.

இன்று வயற் சட்டம் சில மாவட்டங்களில் அமுல் நடாத்தப்படுகின்றது. அது இலங்கை யெங்கும் பரவவேண்டியது. விரைவில் அந்நிலைமை பூர்த்தி யாகும் என்பதை நாம் எதிர்பார்க்கலாம். வயற் பரப்புடன் மட்டும் நிலவுரிமைச்சட்டம் நின்றுவிடுமா? வாழ்க்கைக்கு உழைக்கப்போதாத ஆதனம், அள வுக்கு மீறிய குடிசனநெருக்கம் (குடியடர்த்தி) நவீன செய்கைமுறைகளைக் கைக்கொள்ளாமை, அவற்றை அலட்சியப்படுத்தல், விளைபொருட்களின் உயர்ந்த விலைவாசிகள் முழுநேர வேலையில்லாமை, உழைப்பின்மை, நிலவளத்திலும் நீர்வளத்திலும் அக்கறையில்லாமை ஆகிய பல சிக்கல்கட்குப் பரிகாரங் காணவேண்டியது அவசியமாகும். குத்தகைக்கார ரினதும் வாரக்காரரினதும் நன்மைகளைக் கவனித் தல் அவ்வவரின் தனிப்பொறுப்பன்று. ஜன நாயகத்திலே அது எல்லோரினதும் கடமையாகின் றது. நியாயமான குத்தகை அல்லது வாரம் வகுத்தல் காணி கைமாறுதலில் தடைவிதித்தல், ஆதனங்களைப் பொருளாக்க முறையிற் பங்கிடுதல் ஆகிய நிலவுரிமைச் சீர்திருத்தங்கள் தவிர்க்கப்பட மாட்டா. இன்று ஓர் அளவுக்கு நிலவிவரும் சமூக சமுதாய, சமய, சாதி, அரசியற்கட்சி, மொழி, கிராம, மாவட்ட, மாகாண வேறுபாடுகளையும் பொரு மையையும் பொருள் தேடலிலும், பயன்படுத்தலி லும் ஏற்படும் தவறுகளையும் பொருளாக்கத்துறை யில் தொடர்ந்து சகித்து வருதல் சாத்தியமாகுமா? சொந்தக் கருமங்களிற் கைக்கொள்ளப்படும் பற்று, ஆர்வம், சுயமுயற்சி விடாமுயற்சி, திறமை, நேர்மை ஆகிய பண்புகள் கூட்டுறவுத் துறையிலும் திகழச் செய்யும் கூட்டுறவுத் தொண்டர் விவசாயி கட்கு, முக்கியமாக ஒன்றுபட்டு வாழ்தலும் சொற் கேட்டு நடத்தலும் சமூகத்தகைமைக்கும் தற்காப்புக் கும் இழுக்கு அல்லது தளர்ச்சியுண்டாகுமென நினைப் பவர்க்கு, நல்வழி காட்டல் வேண்டும். எல் லோருக்கும் உழவிலும் தொழிலிலும் பயிற்சி வேண்டும்.

இலங்கை அரசாங்கம் தேர்தல் தொகுதிப் பண்ணைகளை அமைக்க முன்வந்தமை மகிழ்ச்சிக் குரியது. அவை ஆராய்ச்சி அல்லது பரிசோதனை நிலையங்களாகாமலும் தருமத்தாபனங்களாகாம லும் பூரணமாகப் பொருளாக்கக் கமங்களாகவமைய வேண்டுமென விழைகின்றோம். கூட்டுறவுப் பண்ணையமைப்புக்கு அவை ஓர் அளவுக்கு எடுத்துக் காட்டல்களாகவமைய வேண்டும். கணக்குப் புத்த கங்கள், தொழின்முறை, பயிர்வகை, விலங்கினம், குடிசைக் கைத்தொழில், சமுதாய வாழ்க்கை ஆகி யன பண்ணைகளின் முக்கிய அம்சங்களாக அமை தல் விரும்பத்தக்கது. ஏழைக் குடியானவனின் “தேடிய தேட்டம்” பொதுவாக மண்ணிலேயே காணப்படுகின்றது. அவனின் உணவுக்கும் திரு நாள் பெருநாளுக்கும் அவனின் பயிர்கள் போகத் துக்குப் போகம் வருமானம் அளிக்கின்றன. இதனு லேயே கமத்தொழில் ஒரு வாழ்க்கை முறையென வுங் கூறப்படுகின்றது. அது விஞ்ஞான முறையும் வியாபார முறையுங்கூட என்னும் கொள்கைகளையும் துலங்கச்செய்யக் கூட்டுறவுத் துறையே சிறந்த மார்க் கமாகும். இந்த மார்க்கத்திலும் குடியானவனின் நிலவுரிமை காக்கப்படுதல் அவசியமாகும். அப்போது தான் அவனது ஊக்கமும் ஆற்றலும் பூரணமாகப் பயன்படும். சிற்றுதனகாரரின் தோட்டங்களிலே விடிவெள்ளி காலித்த நேரந் துவங்கி இருட்டும் வரையும், வீட்டிலும் மாட்டுத் தொழுவத்திலும் சாமக்கோழி கூவும் வரையும் பலகமத்தொழில் துறைகளிலும், குஞ்சுகுழந்தை முதற்கொண்டு தள் ளாடுங் கிழடுகள் வரை குடும்பத்தினர் எல்லோரும் இயன்றதைச் செய்வதைக் காண்கின்றோம். அவர் களுக்கு உணவுதான் சம்பளம். வருடப் பிறப் புக்கும் தீபாவளிக்குக் கொடுக்கப்படும் துணி புடவை அவர்கட்கு (போனசு) உபகாரமாகும். அநாவசியமான

(24 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........



# அங்கணம்மைக் கடவை

புராதன கண்ணகியம்மன் கோயில்

திரு. ம. பொ. செல்வரத்தினம்

**கண்ணகி வரலாறு**

தமிழகத்தின் கற்புடைமகளிர் போற்றப்பட்டமை மிகப் புராதன வழக்கமாகும். சிலப்பதிகாரத்துக் கதாநாயகியாகிய கண்ணகி தமது கணவன் மதுரைப் பாண்டிய மன்னனுல் அநீதியான முறையிற் தண்டிக்கப்பட்டு இறந்த துயரால் தானும் உயிர் நீத்தனள். இவ்வருஞ் செயலைக் கௌரவிக்கும் முகமாக கண்ணகிக்கு வழிபாடியற்றப்பட்டது. அக் காலந்தொட்டுத் தமிழகம் எங்கணும் கண்ணகிக்கு கோயில்கள் எடுக்கப்பட்டன. ஈழத்திலும் கண்ணகி பத்தினி என அழைக்கப்பட்டு வெகு விமரிசையான வழிபாடியற்றப்படுகிறது. தமிழகத்திலும் ஈழத்திலும் நிலவி வரும் வரலாற்றின்படி, கோவலன் என நாமம் பூண்ட வணிகர் குலதிலகரின் வாழ்க்கைத் துணைவியாக விளங்கியவள் கண்ணகி. இக் கோவலன் என்பான் விதிவலியால், அரசியின் சிலம்பினைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொலையுண்டனன். பாண்டிய மன்னனின் இப்பாபச் செயலுக்கு வஞ்சந் தீர்க்கும் முறையில் மதுரை மன்னனையும் மக்களையுஞ் சபித்தாள் கண்ணகி. அதனுல், மதுரை மாநகரே தீக்கிரையானது. கண்ணகி கதையைக் கேட்ட சேரன் செங்குட்டுவனின் இராணி பரவசமெய்தி இப்பத்தினித் தெய்வம் வணங்கப்படும் பெற்றியுண்டென்று கூற, அரசனும் இணங்கினன்.

இவ் வழிபாட்டுக்குக் கண்ணகியின் திருவுருவச் சிலை அமைப்பதற்காக இமயத்திலிருந்து கல் எடுத்து உரு அமைத்தனன். இப்பிரதிஷ்டா வைபவத்துக்குப் பல அரசர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இலங்கைக் கயவாகு மன்னனும் இப்பெரு விழாவுக்குச் 'சென்றிருந்தான். பத்தினிக் கடவுளின் திருவருள் பாலிக்கப்பட்ட கயவாகு மன்னன் இறும்பூதெய்தி இவ்வழிபாட்டை இலங்கையிலும் நிறுவினன். சோழன் கிள்ளிவளவன் இவ் வழிபாட்டை அவன் தலை நகரிலும் ஆரம்பித்தான். இவ்வழிபாட்டினுல் நாடு சிறப்பெய்தியது. கோவலன் வெட்டுண்டிறந்த நாள் தொடக்கம் பாண்டி நாட்டில் மழை குன்றிப், பஞ்சம் பிணி முதலியன தலை காட்டத் தொடங்கின. கொற்கையில் அரசு வீற்றிருந்த வெற்றிவேற்கிள்ளி இந் நிலையைக் கண்ணுற்று இதற்குக் காரணம் கண்ணகியின் சாபந்தான் என நினைத்து யாகஞ்செய்து பூசை பல இயற்றினுன். அதனுல் நாடு சிறப்பெய்தியது. இக் காரணத்தை முன்னிட்டு, இத் தெய்வமே நாட்டில் மழை குன்றுவதற்கும் நோய், பிணி எழுவதற்கும் மூலகர்த்தாவென மக்கள் கருதினர்.

**கயவாகு மன்னன்**

இச் சிலப்பதிகார வரலாற்றில் கூறப்படும் கயவாகு மன்னன் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது யாழ்ப்பாணத்துக்கு ஊடாகச் சென்றனன். யுத்தத்தின் பின் திரும்பும்போது படையாட்களைச் சிறைப்பிடித்துக்கொண்டு வந்தது மன்றிப் பத்தினிக் கடவுளின் காற்சிலம்பு, இன்னும் வேறு அணிகலன்களும் கொண்டு வந்தனன் என்று இராசாவளிய என்னுஞ் சிங்கள காவியங் கூறும். இவ் வரலாற்றுலும் கயவாகு வேந்தனே இலங்கையில் பத்தினி வழிபாட்டைத் தொடக்கி வைத்தவன் என்ற சிலப்பதிகாரச் செய்தி வலியுறுத்தப்படுகிறது. தெய்வத்தின் படைக்கலங்களும் வேறு பிறவும் வெற்றியில் கிடைத்தவையாயிருக்கலாம். எனினும் பத்தினியின் காலணிகள் பிற்காலத்தில் வழிபாட்டுக்காகச் கொண்டுவரப்பட்டதென்று கொள்ளப்படுகிறது. ஏனெனில், இலங்கையிலுள்ள கண்ணகி ஆலயங்களில் சிலம்பன்றி வேறு உருவங்கள் வழிபாட்டுக்காக அமையவில்லை.

**தமிழகத்தில் கண்ணகைக்குக் கோயில் எடுப்பித்த வைபவத்தில் பிரசன்னமாயிருந்து திரும்பியதும் முதன் முதலாக அங்கணுக் கடவையில் கண்ணகிக்கு ஆலயமும் விழாவும் எடுப்பித்துத் தமது உருவச் சிலையை ஆலய முன்றலில் நிறுவினன் என்று புராதன யாழ்ப்பாணம் என்னும் நூலில் முதலியார் சீ. இராசநாயகம் அவர்கள் கூறிப் போந்தனர்.** இங்கு குறிப்பிட்ட உருவச் சிலை யாழ்ப்பாணத்தில் சேர் போல் ஈ பீறிஸ் அவர்கள் நடாத்திய புதை பொருள் ஆராய்ச்சியில் தலை வேறுகவும் உடல் வேறுகவும் உடைந்து காணப்பட்டமையின் யாழ்ப்பாணம் அரும் பொருட் சாலைக்கு அனுப்பப்பட்டது. கயவாகு மன்னன் நாடெங்கும் பத்தினிக்குக் கோயிலும் விழாவுஞ் செய்தல் வேண்டுமென கட்டளை யிட்டதையிட்டு, யாழ்ப்பாணத்திலும் ஆலயங்கள் எழுந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றும் **வேலம்பரையிலுள்ள கண்ணகி கோயில்** அக்காலத்தில் முதலில் அமைக்கப்பட்ட தென்றும், அதற்குப் பின் கட்டப்பட்டவைகளே **களேயோடை அங்கனுன்கடவு** முதலியவிடங் களிலுள்ளன வென்று யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் **ஆ. முத்துத்தம்பிப்பிள்ளே** அவர்கள் கூறியுள்ளார்கள். புராதன யாழ்ப்பாணத் துத் தலங்கள் அதன் தொன்மைக் **கோயில் கடவை, கந்தவனக் கடவை, பெருமாக் கடவை, அங்கணுக் கடவை** என்ற பழம் பெரும் பெயர்க ளால் உணர்த்தி நிற்கும். இவற்றுள் அங்கணுக் கடவையும் ஒன்ருயிருத்தல் நோக்கத்தக்கது. இக்கூற்றைக் கோலங்கிராய் மீது கோயில் கொண்ட ருளிய கண்ணகை யம்மன் மீது பாடப்பட்ட இப்பாடல் வலியுறுத்துகிறது.

அங்கணம்மைக் கடவை
செட்டிப் புலமச்சூழ்
ஆனதொரு வற்ருப்பளே
மீதுறைந்தாய்
பொங்கு புகழ் கொம்படி
பொறிக்கடவை சங்குவயல்
புகழ் பெருகு கோலங்கிராய்
மீதுறைந்தாய்
எங்குமேயுன் புகழை
மங்காம லோத
என்றனது சிந்தையிலுறைந்த
காரணியே
பங்கமுறு துயரங்கள்
தீரவருள் புரிவாய்
பரிவு செறி கோலங்
கிராயிலுறை மாதே.

**அங்கணம்மைக் கடவை; செட்டிப்புலம், மக் சூழ், வற்ருப்பளே, கொம்படி, பொறிக்கடவை, சங்குவயல், கோலங்கிராய்** எனப் பத்தினிக்கோயில் கள் எட்டுக் கூறப்படுகின்றன. இத்தலங்களுள் பல எங்கிருக்கின்ற வென்று கூறுவதற்கில்லே. இப்பாடலேப் பாடியவர் யாரென்று கூறுவதற் கில்லே. இப்பாடல் வட்டுக்கோட்டை **மு. இராம லிங்கம்** அவர்களால் திரட்டப்பட்ட நாட்டுப் பாடல் தொகுதிகளில் ஒன்றென்பது குறிப்பிடத் தக்கது.

### தெய்வாதீன சம்பவம்

ஒவ்வொரு ஆலயத்தின் தோற்றத்துக்கு அங்கு நிகழ்ந்த தெய்வாதீன சம்பவமே மூலாதார மாக விளங்கும். இச்சிறப்பியல்புக்கு ஏற்ப இப்பழம் பெரும் பதியாகிய அங்கனுள் கடலில் நிகழ்ந்த அருள் விளேயாடலுங் குறிப்பிடப்படல் வேண்டும். பல்லாண்டு கட்கு முன் ஒரு நாள் வளம்பெருந்திய இவ்வயல் பிரதேசத்தில் உழவன் ஒருவன் உழுது கொண்டிருக்கையில் மாதுகள் மூவர் திடீரெனத் தோன்றித் தாக நிமித்தமாகத் தண்ணீர் வேண்டி நின்றனரென்றும், உழவன் இளநீர் கொண்டு வந்து அளித்தன ரென்றும், அப்படியே வெட்டு தலின்றி நீரை மெண்டு சென்றன ரென்றும் அச்சமும் ஆச்சரியமும் அடைந்த உழவன் வீடு சென்று தூங்குகையில் கனவில் தோன்றித் தாம் **மீனுட்சி, கண்ணகை, மாரியம்மன்** எனத் தமது கோலங்களே விளக்கிச் சென்றனர் என்று கர்ண பரம்பரைக் கதைகள் கூறும். உழவர் பக்தி பரவசராய் குடில்கள் அமைத்து முத்தெய்வங் களின் பூசைப்பணியில் ஈடுபட்டனர்.

### பூசாரியார் செல்லர்

பண்டு தொட்டு இப்பூசாரிப் பரம்பரையே கண்ணகை அம்மனுக்குப் பூசை புரிகின்றுர்கள். தொடக்கத்தில் சிறு குடிலாயிருந்த இக்கோயில் கால வெல்லேயில் பெரிதாய் விருத்தியடைந்தது மன்றிப் பல்லோரையும் இப்பதிக்கு ஈர்த்துச் சென்றது. தாம் பெற்ற பெரும் பேருகிய தெய்வ அருட்சக்தியை சிரமேற்கொண்டு தமது தந்தை நடாத்திய வண்ணம் பூசை புரிந்து வந்தனர். காலஞ் சென்ற **பூசாரியார் செல்லர்** அவர்கள், அவர் வழி நின்று அத்தொண்டைக் குறைபடாது இயற்றுகின்றுர். அவர் சகோதரர் **பூசாரியார் கண வதிப் பிள்ளே** அவர்கள். பயபக்தியாய்ப் பூசை நடைபெறுவதும், "அங்கணம்மைக் கடவைதங்கு புகழ் கண்ணகையே" என்று பாடிக் கண்ணகை புகழ்ந்தேத்தப்படுவதும் மக்களேப் பரவசத்தில் ஆழ்த்தி விடுகிறது. இந்நிலேயில் அற்புதங்கள் நிகழ் வதும் இயற்கையே. தெய்வ சக்தியின் அருள் விளேயாடலுக்கு ஏற்ப அப்பதியில் ஓங்கி நின்ற ஆண்பனே பெண்பனேயானதும் பொருத்தமானதே. அதனுல் இப்பதிபராமக்கைப் பதியானது, இன் னும் கண்ணகை அம்மனேத் துதித்து கண்நோய் நீங்கியவர்கள் அநேகர் என்பதைக் கோயில் மூலஸ் தானத்தை அலங்கரிக்கும் கண் நகைகள் புலப்படுத் துகின்றன. இன்னும் ஆலயத்தின் தொன்மை யைப் புலப்படுத்தும் ஏட்டுச் சுவடிகளும், அற்புதங் களேத் தெரிவிக்கும் கர்ண பரம்பரை வரலாறு களும் அதிகம் என்பார்.

**இவ்வரலாற்றைவிடப் பல்வேறு கிராமீயக்கதை களும்** பத்தினி வழிபாடு குறித்து நிலவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தன்மையடைந்த பத்தினி நாககன்னி ரூபத்தில் மதுரையை விட்டுப் புறப்பட்டு **நாகதீவு, கோப்பாய், மட்டுவில், கச்சாய்** முதலியவிடங்களில் தங்கிச் சென்றதாகக் கூறுவர். இன்னுந் தொடர்ந்து **நாகர் கோவில், முல்லைத்தீவு வற்றுப்பளை** ஆகிய இடங்களுக்கும் தொடர்ந்ததாகச் சொல்வர். இது தென்மராட்சி வரலாருகும். வலிகாமம் மேற்குக் கதைகள் இன்னும் வேறுபடும். மதுரையை விட்டுப் புறப்பட்ட பத்தினிக் கடவுள் **நாகதீவு, சீரணி அங்கணுக்கடவை, அளவெட்டி** ஆதியாமிடங்களில் தங்கிய தென்றும், இவ்விதந் தங்கிச் சென்றதாகக் கூறப்படுந் தலங்களில் நாக வழிபாட்டுத் தலங் கள் அல்லது அம்மன் ஆலயங்கள் வெவ்வேறு நாமங்களுடன் திகழ்கின்றன. நாகதீவு, சீரணி முதலாந்தலங்களில் நாகம்மாள் என்றும், அள வெட்டியில் மாரியம்மன் என்றும், அங்கணுக் கடவையில் மீனுட்சி, நாகம்மாள், கண்ணகை என்றும் போற்றி வணங்குவர்.

அங்கணுக்கடவை மீனுட்சி அம்மன் சந்நிதி சிறி தளவில் மதுரை மீனுட்சி அம்மன் ஆலயத்தை ஞாபகப்படுத்திப் பொலிகிறது. இவ்வாலய நிர்வாகத்தைப் பரம்பரை பரம்பரையாக வேதா கமங்களில் பாண்டித்தியமடைந்த சிவப் பிராம ணர்களே கவனித்து வருகின்ருர்கள். வருடா வருடம் மகோற்சவம் ஆடியில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. தொலை விடங்களிலிருந்துவந்து மக்கள், அம்பாளின் அருளைப்பெற்றுச் செல்கி ருர்கள். இன்றும், முதியோர்கள் இச்சக்தியின் அற்புத அருள் விளையாடல்களைப்பற்றிக் கூறுவதைக் கேட்கலாம். இதே தலத்தில் நாகம்மாள் கோவி லும், சிறிது தூரத்துக்கு வடக்கே, அளவெட்டி மக்கள் பரவிப் புகழும் மாரியம்மன் ஆயலயமும் இருத்தல் நோக்கத்தக்கது. அங்கணுக் கடவையில் தெய்வ அருட்சக்தி நிறைந்திருப்பதை, அங்கு விரிந்து படர்ந்து வானத்தை நோக்கி நிற்கும் பெரிய ஆலமரம் சுட்டிக்காட்டுகிறது.

**காலத்தால் கண்ணகை ஆலயஞ் சிதைவெய்திய தைக் கண்ணுற்ற** பூசாரியார் **கணவதிப்பிள்ளையவர் கள் தமது வாழ்நாளிலே** ஆலயம் புனருத் தாரணஞ் செய்யப்படல் வேண்டும் என்று துணிபு கொண்டனர். தெய்வ அனுக்கிரகமும் இருக்கும் போது தெய்வத்திருப்பணி நிறைவேறுதலும் இலகுவே. நாலாதிக்கிலும் அம்பாள் பக்கதர் களின் உதவியை நாடினர் பூசாரியாரும் சகாக்க ளும். பூசாரியாரின் விடாமுயற்சியாலும், சிற்பி களின் சலியாத உழைப்பாலும் கர்ப்பக்கிருகம் ஒருவாறு முடிந்தது. இன்னும் பலவேலைகள் நடைபெற இருக்கின்றன. அன்பர்கள் இன்னும் பொருள் உவந்தளிக்கவேண்டும். செந்நெறி நிலைத் தோங்க, சன்மார்க்கம் தழைத்தோங்க நாம் ஆவன புரிய வேண்டும். அதோடு எம்முன்னேர் அளித்துச் சென்ற கலைக்கருவூலங்களையும் பாதுகாத்துப் பேணுதலும் எமது பெருங்கடமையுமாகும். பல் லாண்டுகளுக்குப் பின் புதிய கர்ப்பக்கிருகத்தில் கண் ணகை அம்மனின் பிரதிஷ்டா வைபவமும், கும் பாபிசேகமும் அண்மையில் நடைபெறவிருக்கின் றது. இச்சம்புரோட்சணவைபவத்தில் கலந்து கண்ணகை அம்மனின் அருளைப் பெற்று உய்வோ மாக.

# சிவதொண்டன் – யோகாஞ்சலி

(13 ம் பக்கத் தொடர்ச்சி)

9

வள்ளுவன்சொல் மறையினுக்கும் மறுவைத் தந்தார்
மாதவஞ்செய் துறவிகளை மதிக்க மாட்டார்
தெள்ளுதமிழ்ப் புலவர்களைச் சிரித்துத் தள்ளி
சினிமாவின் பாக்களையே படிப்பார் நாளும்
கள்ளுண்பர் கொலைசெய்வர் கடவுள் நிந்தை
கணக்கில்லை இவர்வாழக் கருணை கொண்டு
வள்ளலர்செந் நாவலர்முன் சைவம் காத்து
வாழ்ந்திடுயாழ் நகர்தொண்டன் வளர்த்தோய் வாழ்க.

10

குருலிங்க சங்கமமாய் இருந்தாய் போற்றி
குருசீட பரம்பரைக்கோர் மகுடம் போற்றி
திருவடிசேர் இலிங்கமுமாய் திகழ்ந்தாய் போற்றி
சிவதொண்டன் என்றெருபேர் புனைந்தாய்போற்றி
குருபக்திக் கிலக்கணமாம் குருவே போற்றி
குருபரன்தாள் சேவிக்கும் கோவே போற்றி
ஒருநற்சிந் தனைதந்த உலகே போற்றி
ஒலிபோற்றி ஒளிபோற்றி அணுவே போற்றி

11

நாவலர்போல் பெருமைமிகு துறவு சேவை
நமதுமுனி யோகர்பிரான் தவத்தில் மிக்கோன்
பாவலர்செந் நாப்போதர் பாடல் வல்லோர்
பலநடனம் பாரேத்தப் புரிவோர் தந்தாய்
காவலரும் கணக்கறிஞர் சட்டம் வல்லோர்
கரைந்துருகி வணங்குசிவ தொண்டன் மன்னு
நாவலர்தா சன்பாட வைத்தாய் போற்றி
நவில்பதிகம் படிப்போர்க்கு மோட்சம் நல்காய்

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருச்சனை மலர்

தென்றல் உலாவுஞ் செழிப்பான பூஞ்சோலை,
பூஞ்சோலை யுள்ளே பொலிந்ததொரு மல்லிகையில்,
மாலைப் பொழுதில் மலர்ந்த மலரொன்று
காலைப் பொழுதிற் கதிரவனைக் காண்பதற்காய்,

பனிநீர் குளித்துப் பலர்தன் னுடன் பிறந்தார்
இனியா ரொடொன்றி இருக்கின்ற வேளையிலே,
நந்தா வனத்தின் நடுவேயோர் ஆண்டிவந்தே,
இந்தமலர் ஈசற்கு இயைந்தமலர் என்றுசொல்லி,
அந்தமலரை அழகான மென்மலரை

மெல்ல எடுத்து, விரைந்துசென்று கோயிலிலே,
பூசை புரியும் புரோகிதர்கை யிற்கொடுத்தான் ;
ஆசையுடன் வேதியர்தான் அருச்சனைசெய் யும்பொழுதில்,
ஈசன் அடிக்கீழ் இயைந்தவொரு பீடத்தில்,
வெள்ளை மலரதுதான் விழுந்து கிடந்ததுவே,

வள்ளல் அடியிணையை வாழ்த்தி வணங்குமொரு
செஞ்சொற் புலவனங்குச் சேர்ந்தானப் போழ்தினிலே,
நெஞ்சமுருகி நிதமும் வழிபடுவோன்,
ஆடகச்செம் பொன்னால் அமைத்து மணிபதித்த
பீடத்தின் மேலே, பிரிந்து கிடந்தமலர்

வாடத் தொடங்கும் வகையை அவன்கண்டு,
" மென்மலரே ! மென்மலரே ! வெள்ளை நிறமலரே !
வாசமலரே ! மதுத்துளித்த நன்மலரே !
நேச மலரேயுன் நிலையை நினைந்தக்கால்,
உள்ளம் உருகுதையோ ! ஒருநாள் கழியுமுன்னே

வாடி வதங்கி, வனப்பனைத்தும் போயொழிய,
மாண்டு மடிவாயோ ? மண்ணிற் புழுதியாய்த்
தீண்டுவா ரின்றித் தெருவிற் கிடப்பாயோ ?
நந்தா வனத்தின் நடுவே இருந்தனையே,
சொந்தமனை சுற்றம் துறந்து சிவனடியைச்

சிந்தித் திருந்தனையே, செல்வ நறுமலரே !"
என்றினைய சொல்லி, இரங்குவான் கண்முன்னே,
மென்மலரின் ஆவி விழுந்தஉட லைப்பிரிந்து,
மேலெழுந்து சென்று, விரையார் திருவடியின்
வாசத்தொ டொன்றியென்றும் வாடா மலரடியில்,

அத்துவிதம் ஆகி, அமைந்தங் கிருந்ததுவே—
அப்பரிசு கண்ட அணிசொற் றமிழ்ப் புலவன்
வாச மலரின் வரன்முறையைச் சிந்திப்பான் ;
நாவுக் கரசர் நவின்ற திருப்பதிகம்
பேசப் பெரிதும் இனிய பிரான்றன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வாச மலரெலாம் ஆனாய்நீ யே"யென்னும்,
பார்க்கும் மலரூடு பரமன் இருத்தலினால்,
சீர்த்த மலரெடுக்கச் சிந்தைசெலா தென்றுமுனம்
தாயுமா னஅடிகள் சாற்றும் மொழியுமுண்டு,
மல்லரும் பாகி விரிந்த மலரீசன்
நல்லுருவ மாதலினால் நாதனடி நாடியது ;
மாசற்ற உள்ளம் மலருடலம் மன்னுமுயிர் ;
ஈசற் கிவையனைத்தும் என்னக் கொடுத்ததுவே ;
உள்ளம் உடலமுயிர் உள்ள அனைத்தினையும்
வள்ளல் அடியிணையில் வைத்தார் பிறப்பறுப்பார்
என்னும் அழியா இயல்புறுவார் இவ்வுண்மை
நன்றிம் மலரெனக்கு நல்கிய தென்றுள்ளுருகி
வாடா மலரடியை வாழ்த்திப் பணிந்தனனே.

—விபுலாநந்தர்

" ஏடா மலர்சூடேன் எம்பெருமான் பொன்னடியாம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ பைங்கிளியே ".

—தாயுமானவர்

" ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாசமலரெலாம் ஆனாய் நீயே மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி. "

—அப்பர்

" பண்ணேன் உனக்கான பூசையொருவடிவிலே பாவித்திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்திஅப் பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன் அலாமலிருகைதான் குவிக்க எனில்நாணும் என் உளம்நிற்றிநீ
நான்கும் பிடும்போ தரைக்கும்பி டாதலால் நான்பூசை செய்யன்முறையோ
விண்ணேவிண் ஆதியாம் பூதமே நாதமே வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள் வித்தே அவ்வித்தின் முளையே
கண்ணே கருத்தேஎன் எண்ணே எழுத்தே கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு கருணைகரக் கடவுளே. "

—தாயுமானவர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் : தொகுதி 21 பகுதி 1

## கூட்டுறவுப் பண்ணைகள்

(19 ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டி, வழக்கு, பொறாமை, பகைமை காரணமாக ஒருவருக்கொருவர் சரீரவுதவிபுரிதல் கைவிடப்பட்டு வந்துளது. உத்தியோக மோகமும் அதிகார விருப்பும் விவசாயிகளை மயக்கிவிட்டன. கிராம வாழ்க்கையைவிட்டு மாநகர் வாழ்க்கையில் ஏற்பட்ட அவாவினாலும், உடையிலும் உடலிலும் மண் புரள்தலை வெறுப்பதினாலும் வியர்வை கொட்டும் வேலைக்கு உடம்பு இடங்கொடுக்காமையினாலும், தொட்டதிலும் எடுத்ததிலும் புரட்சி எண்ணமே இளைஞர் மனதில் உதிக்கின்றது. இந்த நிலைமையிலே இளைஞரைக் கமத்துக்கிழுத்தல் கடினமாகும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய இளைஞரைப் பழக்குவதற்குத் தேசீய சேவை இயக்கம், சிரமதான வியக்கம் ஆகியன பெரிதும் உதவியாயிருக்கும்.

எனவே, கூட்டுறவுப் பலநோக்குச் சங்கங்கள், தேர்தல் தொகுதிக் கமங்கள், தேசீய சேவை இயக்கம் ஆகியன கூட்டுறவுப் பண்ணைகட்கு அத்திவாரமாக வமைந்து, கமத்தொழில் வர்த்தகமுறையிலே பொருளாக்கத் தொழிலாக மறுமலர்ச்சியுறவுதவுமென நம்புவோமாக.

" தானு நிறைவுற்றுத் தன்னவருமின்புறுதற்கான
வொழுக்காறே யறம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Te n ...y Services
121, POINT- ... ROAD
NALLUR, ... NA
No........



# குற்றம் குற்றமே

**கவிஞர் முருகையன் இயற்றியது**
**(கவிதை நாடகம்)**

கடும் நிறத்திலே வெறுமையான பின்திரை. நடுவே பளிச்சென்ற மஞ்சட்பட்டிலே பொற்கிழி "முழிப் பாகத்" தொங்குகிறது. முன் திரை நீங்கும் போது சாந்தமென் குரலொன்று பாடுகிறது :—

"இறையனுர் கவிக்கும் குற்றம்
இயம்பிய கழக மாந்தர்
அறிவுசால் ஆன்றோர் காதை
அஞ்சாத சான்றோர் காதை !"

காவலன் பொற்கிழியை உற்றுப் பார்த்தபடி இருக்கிறன். பாண்டியன் இடப்புறமாக விரைந்து நுழைய, ஏவலனும் வலப்புறமிருந்து அவசரமாக வந்து கொண்டிருக்கிறன்.

பாண்டியன் : பின்னும் ஒருவரா ? புலவரா ? வரச் சொல்.

ஏவலன் : மன்னர் மன்னவா ! வணக்கம் ; அவ் வாறே !

ஏவலன் வெளிச்சென்று சில கணங்களில் வலப் புறமிருந்து புலவர்–1 நுழைகிறர். அவரைத் தொடர்ந்து புலவர்–2, புலவர்–3 ஆகியோரும் வருகின்றனர்.

புலவர் 1 : தென்னவா! நின் திருவடித் தாமரை
சென்னி மீதிலே சூடிச், செழுந்தமிழ்
செய்யுள்ஒன்று திருமுன்படைக்கிறேன்

பாண்டியன் : புலமைமிக்க, புகழ்மிக்க, செந்தமிழ்க் கலையில் அற்புதம் காட்டும் பெருமையோய் ! செய்யுளா, அது தேனன்றே ? சொல்லுக.

புலவர் 1 : பைந்தமிழ்ச் செழும் பாடல் மரபிலே
இந்த நற்கவி யாத்துளேன் ; கேட்ட
நின்சிந்தனைக்கு விருந்தெனலாம்
எனின் அந்த அவ்வளவே பயன்
சான்றதாம்.

பாண்டியன் : சொல்க அந்தச் சுவைமிகு பாடலை.

புலவர் 1 : (ஆரபியிலே பாடுகிறர்).
"படுமழை பொழிந்த பானுட் கங்குல்
இருளாய் அமைந்தநின் ஈர்ங்குழல், அக்கார்
ஈன்று புறந்தரும் எழில்நறு முல்லை
சூட்டிய இன்பத் தொடர்பால்
வாட்டங் கண்ணீ மணங்கமழ் வதுவே !"

புலவர் 2 : நல்ல சிறந்த விளக்கம் ; அரிவையர்
கூந்தலில் வாசனை கூடி இருப்பதை
என்ன அழகாய் எடுத்து விளக்கினுர்
அறிவு சிறந்த ஆன்ற கேள்வித்
திறமை மிகுந்த இத் தீந்தமிழ்ப்பாவலர் !
மலர்த்தொடை சூடலால் வாசனை எய்திடும்
கூந்தல் என்பதைக் கூறிய பான்மையில்
வாய்ந்த நயத்தினை வகுத்தல் கூடுமோ ?

புலவர் 3 : கொடுக்கலாம் கோடி பொன் ! கொடுக்கலாம் பொற்கிழி
மிடுக்கெலாம் நிறைந்தெழில் மிகுந்து,
கருத்தமைந் துயர்ந்ததிக் கவிதையே;
உண்மையில் உயர்ந்ததே !!

புலவர் 1 : இரவுகள் எத்தனை கண்விழித் திருப்பேன்
எழுதிட இந்தக் கவிதையை ? அதுதான்
உயர்ந்ததாய் அமைந்ததில் உள்ளதோ
வியப்பும் ?

புலவர் 3 : அது சரி, புலவரே ! செய்யுள் புனைய நீர்
எத்தனை நாழிகை எடுத்தீர் ?

புலவர் 1 : இதற்காக ?
பத்துநா ளாகஇப் பாடல் என் நெஞ்சக்
கூட்டினுட் கிடந்து குமைந்ததே யாயினும்
எழுத என்றே எடும் ஆணியும்
எடுத்த பின்னர் "இருபதே விநாடியில்"
விடியச் சற்று முன்னரே இதனை
எழுதி முடித்தேன். எப்படிப் பாட்டு ?

புலவர் 3 : வியக்கத் தகுந்தது. விழுமை மிகுந்தது.

பாண்டியன் : (மனம் பற்ருது. . . . ஈடுபாடில்லாமல்)
சிறந்ததாய் உள்ளதும் உண்மை தான் . . . . ஆமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் 3: பறந்துபோம், அதோ! அப் பரிசில் உமக்கே!
பொற்கிழி தன்னைநீர் பெற்றுச் செல்லுக.
கொண்டுபோம்; உமக்கெனக் கொடுபடக் கிடந்தது.

புலவர் 1: (பொற்கிழியை நோக்கி அடி எடுத்து வைத்து)
நல்லது, செல்கிறேன்; வாழிய வேந்தே!

பாண்டியன்: (திடீரென்று)
இல்லை! சற்றே இருங்கள் புலவரே!
சொல்ல ஒன்றுண்டு
(தடுமாற்றத்துடன்)
நீங்கள் போகலாம்.
(தீர்மானத்தை மாற்றியவன்போல—தயங்கித் தயங்கி)
இல்லை நும் பாடலுக் கீடும் இணையும்.
ஆயினும் எனக்கோ அது முழுநிறைவைத்
தரமறுக் கின்றது; சமுசயப் பட்ட என்
நெஞ்சக் கருத்தையே நேர்முன் னிறுத்தி
அறிவு பயின்றதோர் ஆண்மைசால் நோக்கினுல்
திறமையாய் எடுத்துச் செப்பினீர்—ஆயினும்
சில சில பொழுதிலே அறிவே நிறைவினைக்
கொடுக்கும் வல்லமை அற்றுக் குலைவதும்
கண்டுளோம் அல்லவா? ஆகையால் . . . . .

புலவர் 1: (ஆத்திரம் பொங்க)
பொற்கிழி
தன்னைநான் பெறுதல் தகாதது! இதனையே
சொல்ல நினைத்தநீ சுற்றி வளைக்கிருய்.
அப்படித் தானே, அரசே? சரி, சரி
வேண்டாம் எனக்குப் பொற்கிழி; இலக்கியம்
படைப்பதே என்தொழில்; படைத்ததை வைத்துத்
தமிழ்விலை வாணிகம் செய்து பிழைக்கும்
இழிநிலைக் கின்னும்நான் இறங்கினேன் அல்லன்.
ஆகையால் வருகிறேன்; ஆரும் உனக்குப்
பிடித்த பாடலைப் "பெற்று" வருவார்
பரிசிலை அவர்க்கே பரிவுற நல்கி
நெடுநாள் வாழிய, வேந்தே!
பீடுகள் யாவும் பெற்றுநனி சிறந்தே.

(புலவர் 1 வெளியேறுகிருர்; வேந்தனும் ஆழ்ந்த யோசனையுடன் மெல்ல அரங்கைவிட்டு நழுவுகிருன்.)

புலவர் 3: என்ன இருப்பினும் இனியஇக் கவிதையின்தகுதியைக் குறைத்து மதித்தது தவறே!

காவலன்: தான் கொண்ட கருத்தே எந்தக்
கவியிலும் சமைய வேண்டும்.
தேன்கண்டால் அனைய மேன்மைச்
சிறப்புசால் கவியானுலும்
தான்கண்ட கொள்கை யன்றிப்
பிறகொள்கை கவிஞன் தந்தால்
ஏன் கண்ட னத்தைச் செய்தே
இகழ்கிருர்? தெரியவில்லை!

(புலவர் 2, புலவர் 3 ஆகியோர் தமக்குள் ஏதனையோ பேசிக் கொண்டே வெளியேறுகின்றனர்.)

ஏவலன்: ஏனையா இரைகின்ருய்? உன்
எடுப்பான குரலைக் கேட்டால்
மேன்மைகொள் வேந்தர் உன்னை
மிகக்காய்ந்து சினத்தல் கூடும்.
நாம் என்ன கண்டோம், தம்பீ?
நக்கீரர் முதலா வுள்ளோர்.
தாம் இந்தக் கவிதை பற்றிச்
சரியாகத் தீர்த்தல் கூடும்

(மங்கி இருண்டு வெளிக்கிறது மேடை. தருமி என்னும் அந்தண இளைஞனும், காவலன், ஏவலன் ஆகியோரும் பொற்கிழி பற்றிப் பேசுகிருர்கள்).

தருமி: (பொற்கிழியைச் சுட்டிக் காட்டி)
அங்கே தொங்குவ தென்ன?

ஏவலன்: அதுதான்
பொற்கிழி என்பது, பூசுரர் ஐயா!!
ஆயிரங் காசுகள் அதற்குளே உள்ளன.
ஆயிரங் காசுமே செம்பொற் காசுகள்.

தருமி: ஆயிரம் செம்பொற் காசுகள்! ஆகா!!

ஏவலன்: வாயூறுவதேன், ஐயரே? கிழிக்குள்
உள்ளவை காசுகள்; உண்பதற்குதவுமா?
சர்க்கரைப் பொங்கலோ, தயிரோ, அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதகம், வடையோ, முறுக்கோ என்ருல்
வாய்க்குட் போட்டு விழுங்கலாம் ; அல்லது
கற கற என்று கறிக்கலாம், கொறிக்கலாம்.

தருமி : பறிக்கலாம் தானே அதனைநான் ? பறித்தால் . . . .
(பொற்கிழியை அறுக்க முனைகிருன்)

ஏவலன் : (தடுத்து நிறுத்தி)
நில்லும், நில்லும், ஐயரே ! பொற்கிழி
இலேசிலே அறுத்தல் இயலா தையா ! !
காவல் இருக்கிருேம் நாங்கள், காசினைக்
கள்வரோ, பிறரோ கவரா வாறு.

தருமி : (பெரிதும் வியந்து)
நல்ல புத்தி சாலிகள், ஐயா !
நடு மண் டபத்திலே காசுப் பையினைக்
கட்டித் தொங்கவன் விட்டீர் ? பின்னர்
காவல் என் இருக்கிறீர் ? கண்கள் என் விழிக்கிறீர் ?
பொற்கிழி தூக்கிய நோக்கம் யாவதோ?
வேலே வினைக்கெடும் அவசியம் யாவவதோ ?
அவளைத் தொடுவதேன் ? கவலைப் படுவதேன் ?
மூளை இருந்தால், காசினைக் கொண்டு போய்ப்
பெட்டகத்துள்ளே வைத்துப் பூட்டித்
திறப்பினை இடுப்பிலே செருகி விட்டபின்
நிம்மதியாக நித்திரை கொள்ளுவீர்
அப்படித் தான்நான் செய்தும் இருப்பேன்
என்னிடம் பொற்கிழி இருக்குமே யானல்.

ஏவலன் : அதுதான் உம்மிடம் இல்லையே ! ஆகையால்
அற்புத மானஉம் புத்தியைக் கொண்டு போம்,
பக்குவ மாகப் பழுது படாமல்
அதுதான், ஐயா வெளியே போம்வழி
(வெளி வழியைச் சுட்டிக் காட்டுகிருன்)

காவலன் : (இடை மறித்து)
இல்லை, ஐயா ! இந்தப் பொற்கிழி
உமது கையினும் உற்றிடல் கூடும்

தருமி : எனது கையிலா ? எப்படி ?

காவலன் : இதனைப்
பரிசி லாய் நீரும் பெறலாம்,விரும்பினல்
மன்னர் இந்தப் பொற்கிழி தமிழில்
இன்னருங் கவிதை எழுதுவோர்க்குப்
பரிசிலாய் வழங்கல் குறித்துளார்.

தருமி : கவிக்கா ?
எனக்கும் தெரியுமோ, இலக்கண இலக்கியம் ?
பாட்டும் செய்யுளும் பண்ணும் பரதமும்
கூத்தும் வல்லவர் எவரே யாயினும்
வந்து, பரிசிலை வாங்கி ஏ கட்டும்.

காவலன் : இல்லை, ஐயரே, இப்படி யேநீர்
ஒற்றைக் கட்டையாய் எத்தனை ஆண்டுகள்
இன்னும் இருந்திட எண்ணினீர்? இந்தப்
பொற்கிழி கிடைத்தால், புகழும் கிடைக்கும்.
அப்புறம் என்ன ? ஐப்பசி பிறக்கும்
பொற்றெடி புனைந்தொரு பூங்கொடி உமதுதோள்
தழுவ வருவாள் ; சகலவை பவங்களும்
மந்திர லோபம் தந்திர லோபம்
கிரியா லோபம் ஒன்றுமே இன்றித்
திருமணம் உமக்கும் நடைபெறும் ;
பின்னர் . . . .

ஏவலன் : (இடைமறித்து—ஏகத்தாளமாக)
சர்வெ ஜனுஹா சுகினே பவந்து
சமஸ்தம் மங்க ளானி பவந்து ! !

தருமி : (கனவு காணும் கண்களுடன்)
பிள்ளைகள் எனக்குப் பிறக்கவும் கூடும்; என்
இல்லறம் செழிக்கும் என்ரு சொல்கிறீர் ?

காவலன் : ஆமாம், ஐயரே ! அப்படிச் செய்யும்

தருமி : பரிசில் பெறஒரு பாடல் வேண்டுமே !

ஏவலன் : (கிண்டலாக)
கூடலின் கழகம் குழுமி யிருந்த
பல்கலைப் புலவர் பலநாள் முயன்றும்
ஏற்ற கவிதையை இயற்றினரில்லையே ! !
தருமி ஐயரா, தக்க கருத்துடன்
செய்யுள் செய்ய வல்லவர் என்கிருய் ?

தருமி : (ஏவலன் கூற்றை அனுவதித்து)
அதுதானே பொற்கி ழிக்கும்
அடியேனைப் போன்றுள் ளார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுதூரம் ; ஆகை யாலே
விடுவோம் அக் காசின் ஆசை.

காவலன் : (மறுப்பைக் காட்டத் தலையை மெல்ல அசைத்து)
முயற்சியின் முனைப்பி னாலே
உயர்ச்சியை அடைய லாம் என்
றுயர்ந்தவர் சொன்ன ரன்றோ ?
அயர்ச்சியை விடுக ; உம்மேல் அன்புடை ஆலவாயின்
வியத்தகு கருணைமிக்க
இறையனார் முன்பு சென்று வேண்டுதல் செய்தீ ராயின்
மெய்யறி வுடைய அன்னார்
வேண்டிய வேண்டி யாங்கே
விதிப்பர் ; ஓர் கவிதை யாத்துப்
" பாண்டியன் முன்பு காட்டிப்
பரிசிலைப் பெறுவாய் ", என்று
தூண்டிடும் அன்பி னாலே
சொல்லுவார் ; நீரும் உயர்வீர்.

தருமி : (தான் முன்பே இதனை ஏன் யோசிக்க வில்லை என்ற ஆச்சரியத்துடன்)
உண்மைதான், அன்ப ரே ! ஆம்
உரைத்தன அனைத்தும் நன்றே ! !
எண்ணத்தில் இதனை முன்பே
எதற்காய் நான் நினைக்கவில்லை ?
அண்ணல் என் மீதில் மிக்க
அருளுடை இறைய னார், ஓர்
தண்ணெழில் கமழும் பாடல்
தாராரோ, நான் கசிந்து வேண்டின் ?
உடனே நான் போக வேண்டும்.

காவலன் : ஓய் ! நில்லும், தருமி ஐயா ! !
பட படப் பெதற்கு ? வேண்டாம்
பாட்டு நீர் எதனைப் பற்றிக்
கொடுத்திடல் வேண்டும் என்று
தெரியுமா ? கூறும், பார்ப்போம் !

தருமி : அட அதை மறந்தே போனேன்.
ஆம், அதைத் தயவு செய்து
சொல்லுங்கள் பார்ப்போம்—

காவலன் : நில்லும் சொல்லுகிறேன் ; வழுதி வேந்தன்
பல்வகை மலர்கள் பூத்த
பசுமரச் சோலை புக்குச்
செல்கையில் அரசி யோடு,
தென்றலிற் புதிதாய் ஏதோ
நன்மணம் எழுதல் நோக்கி
நயப்புடன் வியப்பும் கொண்டான்.

தருமி : நயப்புடன் வியப்பும் கொண்டான் !
அப்புறம் ?

காவலன் : அந்த வாசம்
எப்படி வந்த தென்றே
எண்ணி ஆய்ந் தறிந்த போதில்
நெஞ்சிலோர் ஐயம் தோன்றி
நிகழ்ந்ததாம் ; அந்த ஐயம்
நீக்கிடும் பாடல் தந்த
நேரிலாப் புலவர்க் கிங்கு
தூக்கிய கிழிக்குள் வைத்த
சொர்ணத்தைப் பரிசிலாக
ஆக்கவே கருமம் என்ற
ஆணையைப் பிறக்க வைத்தான்.
காக்க என் றிருவர் எம்மை
நியமித்தான் ; ஆத லாலே . . . .

தருமி : இவையெலாம் கருத்துடன் கொண்டே
இறையனார் பாடல் தந்தால்
அவையிலே அதனைக் காட்டி
அக்கிழி பெறலாம் போலும் !
சரி, சரி, வருகின் றேன்நான்
(தருமி போகிறன்–ஏவலனும் மெல்ல நழுவுகிறன்)

காவலன் : தருமியின் இயல்பை நோக்கின்
சிரிப்புத்தான் தோன்றப் பார்க்கும்
சில சில வேளை ; என்ன,
இல்லையா அண்ணே !

காவலன் கண்களை மூடிக் கொண்ட அரைத்தூக்க நிலையிலேயே கொட்டாவி விட்டபடி, ஏவலன் இருப்ப தாக நினைத்துக் கொண்டு இவ்வரிகளைப் பேசியவன், பின்னர் ஏவலன் அங்கில்லாததை உணர்ந்ததும் காவலன் : அண்ணே ! !

இவன் எங்கே தொலைந்து போனன் ?

(மங்கி இருண்டு வெளிக்கிறது. புலவர் 2, புலவர் 3, புலவர் 4, பாண்டியன், தருமி, நக்கீரனர் ஆகியோர் மேடையில் உள்ளனர். புலவர்கள் பலர் அமைதியின்றிப் பேசும் இக்காட்சியின் முற் பகுதி பரபரப்புடன் வேகமாக நடக்கிறது).

புலவர் 2 : தருமியா ? இவன,

புலவர் 4 : கவிதையா எழுதினன் ?

புலவர் 3 : இலக்கண வழுக்கள் ?

புலவர் 4 : எதுவுமே இல்லையாம்.

புலவர் 3 : எனக்கு, முன்பே தெரியும், இவன் ஓர் பிறவிப் புலவன்.

புலவர் 2 : பெருந்திறல் நாவலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலன் : அமைதி ! அமைதி !

(ஓசை ஒடுங்குகிறது)

பாண்டியன் : அந்தணர் பெருந்தகை,
தருமி என்னும் தமிழ்ச்சுவை தேர்வலன்
பருகும் நற்சுவைப் பைந்தமிழ்ப் பாவலன்
கூடலின் ஆய்ந்து குளிர்ந்தரம் மொழிக்கொரு
பாடல் தந்துளான் ; அனைவரும் கேண்மினோ !

புலவர் 2 : அனைவரும் கேண்மினோ ! அனைவரும் கேண்மினோ !
அதோதொடங் குகிறுர், அந்தணர்.

பாண்டியன் : அமைதி !

தருமி : (ஆரபியில் பாட முயல்கிறுன். அநுபவமின்மையால் இடையிடையே அபசுரம்)
“ கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பீ !
காமம் செப்பாது கண்டது மொழிமோ !
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே ?”

புலவர் 3 : கொங்குதேர் வாழ்க்கை ! குளிர்தமிழ் !!

புலவர் 2 : புதுத்தொடர் !

புலவர் 3 : கருத்து நெருக்கமும், கற்பனைப் பெருக்கமும்
செறிந்து நிறைந்த திருந்திய சொற்றொடர்.

புலவர் 2 : காமம் செப்புதல் ! காமமோ விருப்பம்.
ஒருபால் மிகுந்த ஒவ்வா விருப்பினுல்
பக்கம் சார்ந்து பல பல பேசுதல்—
நடுவு நிலைமை சாய்ந்து கோடலால்
படுபொய் பேசலே, காமம் செப்புதல்.
அருமையாய் அதனைச் சொல்லி இருக்கிருர் அந்தணர் பெருந்தகை, அருந்தமிழ்ப்பாவலர் !!

புலவர் 3 : பயிலியது கெழீஇய நட்பின் நெருக்கம்
மயிலியல் என்றதால் வலியுறு கின்றது.
மயிலியற் சாயலைக் கட்புலன் அன்றித்
தழுவலே மிகமிகச் செம்மையாய்க் காட்டும்
உற்றறி புலனே உண்மையைக் கூறும்
செறி எயி றென்கையில் அரிவையின் இதழ்களை
உண்ட அநுபவம் உரைக்கப் படுதலால்
கூந்தலை மோந்தமை குறிப்புரை அன்றது.
உய்ந்தறிந் தெழுதிய ஒருபொரு ளன்றது
உற்றறிந் துரைத்த ஒன்றே என்னும்படி
மயிலியல், செறிஎயி றென்பவை கூறித்
தும்பியை நோக்கிச் சொல்லிய பாடல்
நலம்பு னைந் துரைத்தலின் சிகரமே எனத்தகும்.
ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
அளிக்கத் தகும்இவ் வழகிய கவிக்கு.

புலவர் 2 : எங்கே அந்தக் கவிதையைத் தாரீர்
இன்னும் ஒரு முறை படித்துப் பார்க்கிறேன்.

(கவிதையை வாங்கி)

“ கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பீ !
காமம் செப்பாது கண்டது மொழிமோ—
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே? ”
வாசனை நுகரும் வாழ்வே வாழ்வாய்
வாழ்வாய், வண்டே ! நடுநிலை வழாஅது
வினவிய தற்கு விடைதா ! மிகவும்
நெருங்கின் பழகிய அன்புடை அரிவையள்,
மயில்போற் சாயலை உடையவள், செறிந்த
அழகிய வெண்பல் அமையப் பெற்றவள்
அவளது கூந்தலை வெல்லும் மணமுடைப்
பூவினை நீயும் அறிவையோ, வண்டே ?
நறுமணம் வீசிடும் நங்கையின் கூந்தலைத்
தும்பி யுடனே தோழமை பூண்டு
பேசலின் மூலம் பூசனை புரிகிறுன் !
காதலின் சாரமே பூசனை போலும் !!
தலைவனின் அன்பின் தகுதியை
எண்ணின் வியப்படை யாமல் இருத்தலும் இயலுமா ?
“ கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத தும்பி ”
கூடலின் ஆய்ந்த குளிர்மொழி தனக்கொரு
தேட லரிய செல்வமே யாகும்.
கொடுக்கலாம் பரிசிலை ; கொடுக்கலாம் பொற்கிழி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L8
Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............



மிடுக்கெலாம் நிறைந்தெழில் மிகுந்து கருத்தமைந்
துயர்ந்ததிக் கவிதையே; உண்மையில் உயர்ந்ததே ! !

பாண்டியன் : அந்தணர் பெருமான் ! அங்கே தொங்கிடும்
பொற்கிழி உண்மைப் புலவரைப் பார்த்தே
என்று வருவரோ ? எவருமே வராரோ ?
என்று நினைந்தே ஏங்கிய பொற்கிழி
உரிமை கொண் டாடிட ஒருவரைப் பெற்றது.
பொற்கிழி உமக்கே உரிமை ஆதலால்
பெற்று நீர் மகிழ்க. பீடுகள் நிறைக.

தருமி : மிக மிக வந்தனம், வேந்தர் வேந்தே !
(பொற்கிழியை அறுக்க முந்துகிறன்)

நக்கீரனுர் : (ஓடிச் சென்று, கையிலே பற்றிப் பலமாக இழுத்து)
நிறுத்தும், ஐயரே !

பாண்டியன் : யாரது ? கீரனுர் ! !

புலவர் 4 : என்ன பிசகு ?

புலவர் 2 : யாது குழப்பம் ?

பாண்டியன் : எடும்என யான் உரை செய்யவும்,
அதற்குத் தடையுரை சொன்னதார்? கீரரா?

புலவர் 3 : ஏன் ? ஏன் ?

புலவர் 2 : அநீதி ! அநீதி ! !

புலவர் 3 : அடாதிவ் வடாத்து

நக்கீரனுர் : (அமைதியாக)
குற்றம் நிறைந்ததே, அந்தணர் வழங்கிய
சற்றுமுன் புகழப் பெற்ற அக் கவிதை

தருமி : (வியப்புடன்)
கொங்குதேர் வாழ்க்கை குற்றம் உடையதா?
நம்பவே என்னுல் இயல வில்லையே !
இறையனுர் இயற்றிய பாடலிற் கூடக்
குற்றம் பொருந்தல் கூடுமா ?

நக்கீரனுர் : (பரிகாசமாக)
ஓகோ !
இறையனு ரா அதை இயற்றித் தந்தவர் ?
தருமி ஐயரே எழுதினுர் என்றுதான்
கருதிநான் மிகவும் பெருமிதம் அடைந்தேன்.

புலவர் 4 : இறையனு ரா ? அவர் யாவரோ ? முன்பு
யாம் கேட்டறியாத புலவராய் இருக்கிருர் !

நக்கீரனுர் : பாட்டறியாத பாமர ருக்குச்
சொல்லுதல் போலத், தோகையர் கூந்தலில்
இயற்கையாய் வாசனை இருக்கிற தென்று
துணிந்து படுபொய் சொல்லி இருக்கிருர்.

புலவர் 3 : இறையனுர் என்பவர் எங்கே ? யாரவர் ?

இறையனுர் : (இறையனுர் என்ற புலவர் நுழைகிருர்—கம்பீரமாகக், கைப்பிரம்பு சகிதம்)
இறையனுர் யாவராய் இருந்தால் என்ன ?

புலவர் 4 : (வியப்புடன்)
புதியதோர் புலவர் !

புலவர் 2 : இவரார் ?

ஏவலன், காவலன் : அறியோம்.

புலவர் 4 : கண்டறி யேயாமே முன்னர்எப் போதும்!

புலவர் 3 : இவரே போலும் இறையனுர் என்பவர்.

பாண்டியன் : இறையனுர் என்பவர் இவரே, இவரே!

இறையனுர் : என்பா டலிலே குற்றம் கண்டவர்
யாவரோ ? என்ன துணிச்சல் அவர்க்கு ?

நக்கீரனுர் : பார் புகழ்ந் துரைக்கும் கீரன்—யானே
"கொங்குதேர் வாழ்க்கையிற் குற்றம் கண்டவன் ?

இறையனுர் : எக்குற்றம் கண்டீர், இந்த
எழில்பெற்ற கவியில் ?

நக்கீனுர் : ஆமாம் !
சொற்குற்றம் ஒன்றும் இல்லை.
பொருட்குற்றம் நிறைய உண்டு.
அற்குற்ற கூந்தலெல்லாம்
அணிமலர்ச் சார்பால் அன்றே
பெற்றிடும் நறும ணத்தை ?
பின்னை நீர் கூந்தல் வாசம்
இயற்கையே என்று தோன்ற
இயற்றினீர் செய்யுள் என்றல்
செயற்கையாய்ப் புனைந்த பொய்மைக்
கற்பனைச் செத்த லாலே
உயற்சொல் உண்மை வாய்ந்தே
ஒப்பற அமைய வேண்டும்
நயத்தகு கவிதைக் கின்று
நாசத்தை வருவிக் கின்றீர்.

இறையனுர் : கூந்தலின் கமழ் வியற்கை
என்றுநான் கூற வில்லை.
காந்தனின் வாயில் அன்றே
கற்பனை புகுத்தி யுள்ளேன் ?

நக்கீரனுர் : தலைவனே படுபொய் பேசும்
தன்மையில் தமிழைச் செய்தால்
உலகம் அவ் வழியிற் சென்றே
உருக்குலைந் தழியும் அன்றே ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையனார் : தலைவியின் மீதில் அன்பு
தலைவற்கு மிகுந்த தாலே
பலபல புனைந்து சொல்லிப்
பரவுதல் இயற்கை தானே !
சிலசமயத்தில் அன்னோன்
சித்தம் பே தலித்தான் போலத்
தலைவியில் ஈடுபட்டுத்
தடுமாறிப் போதல் எல்லாம்
உலகியல் வழக்கே யாகும்
அதனையே உயர்ச்சி சான்ற
நாடக வழக்கு வாய்ந்த
நற்றமிழ் முறையிற் சொன்னேன்.
கேடென்ன, அதிலே உண்டு
கீரரே ?

நக்கீரனார் : தாங்கள் சொல்லும்
வாதத்தைக் கணக்குப் போட்டால்
வாய்மையே வேண்டாம் என்னும்
போதத்தைப் பெறுபேறுகக்
கொள்ளலாம் போலும், போலும் ! !

இறையனார் : வாய்மையல் லாதி ருக்கும்
வாய்மையே வாய்மை ஆயின்
தூய்மைவா தங்கள் பேசிச்
சுகமென்ன பெறுதல் கூடும் ?
ஆய்தமிழ்ச் செய்யுள் எல்லாம்
வாழ்விலே அமைந்து தோன்றும்
வாய்மையைக் கூற வேண்டின்
வாழ்க்கையின் வாய்மை யன்மை
எழுத்திலே ஏறு தல்தான்
இயற்கையாம் ; அதிலே எல்லாம்
வழுவென்ன காண்கின் றீர்கள் ?

நக்கீரனார் : வாய்மையே வேண்டாம் தானோ ?

இறையனார் : மீண்டுமேன் அதேபா டத்தை
விளங்காமல் ஓது கின்றீர் ?
பாண்டியன் அவைக்கு மேயோர்
பழிப்பினை விளைவிக் கின்றீர்
நீண்டதேல் மேலும் நாக்கு
நிறுனீர்.

(இறையனார் சீற்றத்துடன் நோக்க)

நக்கீரனார் : ஓகோ ! அந்த
ஆண்டவன் என்றோ உம்மை
அகத்துளே நினைத்துக் கொண்டீர் ?
விழிகளை உருட்டி என்னை
வெருட்டிடல் இயலா தையா.
மொழிகளால் வாதம் செய்தல்
முடியுமா என்று பாரும்
பொழிகனல் சிந்தும் பார்வை
புலவரே, உமக்கு வேண்டாம்
எழுதின்றீர், நெற்றிக் கண்ணால்
எரித்திட இயலும் போலும்

(இடி முழக்கம் ; உச்சஸ்தாயியிலே திடீரென விம்மும் இசை–இரண்டு வெளிக்கிற போது மேடையிலே ஒருவரும் இல்லை. நக்கீரர் மட்டும் அங்கு உள்ளார் என்பது அவர் எழுந்து நிற்க முயலும் போது தெரிகிறது. அவர் வியர்வையால் நனைந்திருக்கிறார். உடல் நடுங்குகிறது. பதறும் தொனியிலே பேசுகிறார்.)

நக்கீரனார் : நெற்றியில் மட்டும் என்ன ?
நேர்ந்ததும் உடலம் முற்றும்
பற்பல கண்கொண்டாலும்
பயப்பட மாட்டேன் ; செய்த
குற்றமோ குற்ற மேயாம்.
கொதிப்பினால் மறுக்க லாமோ ?

(அவரது படபடப்பு ஓய்கிறது. மெல்லிய புல்லாங்குழலோசை இழைகிறது. சில விநாடி மௌனம். முன் நடந்தவற்றை நினைத்துப் பார்க்கும் தோரணையில்–ஆறுதலாக)

கற்றைவார் சடைசேர் அண்ணல்
கருணையே கருணை யாகும் !
கொண்ட கொள்கையை விடாது
கூறிடும் பலத்தை அந்த
வண்டமர் குழலி பாகன்
வழங்கினான்.

(பாண்டியன் மேடையில் நுழைந்து நக்கீரரின் தோளிலே கையைப் போட்டு ஆதரவுடனும் தோழமையுடனும் பேசுகிறான்).

பாண்டியன் : எனினும் நீரும்
பாவனை என்னும் அந்தப்
பாடலின் அமிசந் தன்னைத்
தேசையே இல்லை என்று
செப்பினீர்–சரியன் றேனும்,
ஆக்கியோன் பெயரைக் கொண்டே
கவிநயம் அளந்து கூறும்
போக்கற்றோர் போக்குக் கெல்லாம்
புதைகுழி தோண்டி விட்டீர்
உண்மைக்கே இலக்கி யத்தில்
உயர்வான இடமுண் டென்ற
எண்ணத்தை நாட்டி விட்டீர்
இதனைநான் மெச்சு கின்றேன்.

(இருவரும் கூடிக் கொண்டு வெளியேற, மேடை மங்கி இருளத் திரை விழுகிறது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P... O ROAD
NALLUR, JAFFNA
No........

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 10 | 0 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 30 | 0 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. ..<br>(ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷை<br>(iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷை ..<br>(iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷை .. | 0 50 | 0 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. .. | 0 20 | 0 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 30 | 0 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் .. .. | 0 80 | 0 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 40 | 0 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 30 | 0 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. .. | 1 05 | 0 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. .. | 0 45 | 0 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச் சட்டம் | 0 30 | 0 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 10 | 0 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் .. | 2 75 | 0 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 10 |

குறிப்பு.—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org